# *மாற்றத்திற்கான விதைகள்: 1950களிலிருந்து இன்று வரையிலான பள்ளி இயக்கங்கள்*

**கண்காட்சி உரை**

## அறிமுகம்

நண்பர்களுடன் பாலுக்காக வரிசையில் நின்று,
கடைகளுக்கு அருகில் உள்ள வடிகாலில் பல் துலக்கி,
வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருக்கத் துணிகளைப் பிழிந்து,
பள்ளி வளாகத்தைப் பசுமையாக மாற்ற விதைகளை விதைத்தோம்.
சேமிப்புக்காகக் காசுகளைச் சிறுகச் சேர்த்து அஞ்சல் தலைகளாக்கி,
அக்கறை கொள்வதும் பகிர்ந்துகொள்வதும் நம் வாழ்க்கை
முறையானது.

சிங்கப்பூரின் கடந்தகால, நிகழ்காலப் பள்ளி இயக்கங்களின் இந்தக் காட்சிகள் உங்களுக்குப் பரிச்சயமானவையாக இருக்கலாம்.

இயக்கங்கள் - வாழ்க்கையை மேம்படுத்த மாற்றத்தை வலியுறுத்தி, விழுமியங்களை வடிவமைக்கவும் பெருந்திட்டங்கள், சிங்கப்பூரின் முன்னேற்றத்திற்கும் அடையாள உருவாக்கத்திற்கும் மையமாக விளங்குகின்றன. வெவ்வேறு பின்னணிகளிலிருந்து வரும் மக்களிடையே ஒரு பொதுவான சமூக மொழிப் பரிமாற்றத்தையும் வாழ்க்கை முறையையும் விதைப்பதற்கான ஒரு வழிமுறையாக இவை திகழ்கின்றன. நாட்டு நிர்மாணத்தின் தொடக்கக் காலகட்டமான 1958க்கும் 1995க்கும் இடையில், சிங்கப்பூர் கிட்டத்தட்ட 200 தேசிய இயக்கங்களை நடத்தியது. இவற்றுள் பல, குழந்தைகளுக்கு விருப்பமான பழக்கவழக்கங்களையும் விழிப்புணர்வையும் இளம் வயதிலேயே வளர்க்கப் பள்ளிகளிலும் செயற்படுத்தப்பட்டன.

சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்த 60ஆம் ஆண்டை நினைவுகூரும் வகையில், 1950களில் நாடு சுயாட்சி பெற்றதுமுதல் இன்று வரை உள்ள பள்ளி இயக்கங்களை இந்தக் கண்காட்சி மறுபார்வையிடுகிறது. மாணவர்களின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துதல், தூய்மையான, பசுமையான

சூழலை உருவாக்குதல், பழக்கவழக்கங்களையும் விழுமியங்களையும் வடிவமைத்தல் போன்ற பரந்துபட்ட அளவிலான முயற்சிகளை மீண்டும் மேற்கொள்ளுங்கள். இந்தக் கூட்டு முயற்சிகள் மூலம், ஆசிரியர்களும் கல்விப் பங்காளிகளும் இளம் மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்திற்கான விதைகளை விதைத்தனர். இது சிங்கப்பூரின் முன்னேற்றத்திற்குப் பங்களித்து, இன்று நாம் போற்றும் தேசமாக வளர்ந்துள்ளது.

ஓர் SG60 நிகழ்வு

SG 60

இதை வழங்குவோர்:

HERITAGE CENTRE

Academy of Singapore Teachers
lead. care. inspire.

Ministry of Education SINGAPORE

ஆதரிப்போர்:

sph media

## ஆரோக்கியமும் நல்வாழ்வும்

1950களிலும் 1960களிலும், காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்டு, சுயாட்சியையும் பின்னர் சுதந்திரத்தையும் பெற்ற சிங்கப்பூர், ஓர் இளம் நாடாக அடியெடுத்து வைத்தது. அந்தக் காலகட்டத்தில், குறிப்பாக நகரத்தின் நெரிசல் மிகுந்த பகுதிகளில் வாழ்க்கைச் சூழல் பொதுவாக மோசமானதாகவும் சுகாதாரமற்றதாகவும் இருந்தது. ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் முன்னிட்ட பள்ளி இயக்கங்கள், ஊட்டச்சத்துக்கான பால், தொற்று நோய்களுக்கான தடுப்பூசிகள், சுகாதாரத்தைப் பேணும் பல் துலக்குதல் போன்ற அடிப்படை அம்சங்களில் கவனம் செலுத்தின. பால் தயாரித்து விநியோகிக்கவும், சரியான பல் துலக்கும் முறையை விளக்கவும் ஆசிரியர்கள் பணிக்கப்பட்டனர்.

1970களில், சிங்கப்பூர் செல்வச் செழிப்புமிக்க நாடாக வளர்ந்தபோது, இந்த இயக்கங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதிலும், தீங்கு விளைவிக்கும் பொருள்களுக்கு எதிராக எச்சரிப்பதிலும் கவனம் செலுத்தின. அண்மைய ஆண்டுகளில், இணைய நல்வாழ்வு, மனநல ஆரோக்கியம் முதலியவற்றை உள்ளடக்கி, இதன் கவனம் விரிவடைந்துள்ளது. இக்காலகட்டம் முழுவதிலும், மாணவர்கள் நலனில் அக்கறை காட்டுவதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்காற்றியுள்ளனர் - நன்முறையில் முடிவெடுக்க வைத்து, உறுதியான ஆதரவை வழங்கினர்.

## ஒருநாளைக்கு ஒருவேளை பால்

1930களின் முற்பகுதியில், மருத்துவ, சுகாதார அதிகாரியான டாக்டர் ஜே.டபிள்யூ. ஸ்கார்ஃப், ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள பள்ளி மாணவர்களுக்குப் பால் வழங்கும் முன்னோடித் திட்டத்தைத் தொடங்கினார். இது அவர்களின் ஆரோக்கியத்திலும் செயல்திறனிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தியது. 1957ல் உலக உணவுத் திட்டத்தின்கீழ், பால் வழங்குதல் விரிவுபடுத்தப்பட்டது. ஏறத்தாழ 30,000 மாணவர்கள் கோதுமை, சோயா கலவை, மற்றும் கொழுப்பு நீக்கப்பட்ட பால் மாவு

ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பானத்தைப் பெற்று புரதம் மற்றும் வைட்டமின் உட்கொள்ளலை அதிகரித்தனர்.

தொடக்கத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே பள்ளியில் பால் வழங்கப்பட்டது. ஊட்டச்சத்தையும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும் மேம்படுத்தும் நோக்கில், 1974-இல் எல்லாத் தொடக்கப்பள்ளி மாணவர்களாலும் பள்ளிப் பால் திட்டத்தின்கீழ் மானிய விலையில் பாக்கெட் பாலை வாங்க முடிந்தது. மாணவர்களிடையே உடல் பருமன் அதிகரித்ததால், கொழுப்பின் அளவைக் குறைக்க, நீர்ப்பகுப்பு செய்யப்பட்ட பாலையும் (hydrolysed milk) குறைந்த கொழுப்புள்ள பாலையும் அதிகாரிகள் வழங்கினர். இந்தத் திட்டம் இறுதியில் 1988ல் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, பின்னர் நிறுத்தப்பட்டது.

| | |
|---|---|
|  | ராடின் மாஸ் பள்ளியில் ஒரு குவளை பாலுக்காக வரிசையில் நிற்கும் குழந்தைகள்.<br>29 அக்டோபர் 1952.<br>தகவல், கலைகள் அமைச்சின் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது |
|  | ரிவர் வேலி தொடக்கப்பள்ளி மாணவர்கள், கல்வி அமைச்சின் (MOE) பள்ளிப் பால் திட்டத்தின்கீழ் மானிய விலையில் பால் பெறுகிறார்கள்.<br>18 ஏப்ரல் 1974.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |



தங்ளின் தொடக்கப்பள்ளி மாணவர்கள், பள்ளிப் பால் திட்டத்தின் கீழ் நீர்ப்பகுப்பு செய்யப்பட்ட பாலைக் (hydrolysed milk) குடிக்கிறார்கள்.
21 ஏப்ரல் 1986.
தகவல், கலைகள் அமைச்சின் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது

காலையுணவு உண்ணாமல் பள்ளிக்கு வந்தவர்களுக்கு நாங்கள் பால் தயார் செய்ய வேண்டியிருந்தது. பெரிய பைகளில் பால் மாவு எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. நாங்கள் தண்ணீரைக் கொதிக்க வைத்து, பால் மாவைக் கலந்து, காலையுணவு உண்ணாமல் வந்தவர்களுக்குப் பரிமாறினோம். அவர்கள் வகுப்பறைக்குச் செல்வதற்குமுன் அதைக் குடித்தார்கள்.

திருவாட்டி நந்தா பண்டார,
1960களில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்,
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்துடன் வாய்வழி வரலாறு
நேர்காணல், சேர்க்கை எண். 004583.

மாவுப் பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட முதல் கோப்பைப் பாலைக் குடித்தபோது, எனக்குக் குமட்டல் ஏற்பட்டது. மறுநாள், எனக்குக் குமட்டல் வராமல் இருப்பதற்காக, ஒரு பாக்கெட் சர்க்கரையைக் கொண்டுவந்து பாலில் போட்டுக்கொண்டேன்.

*சில மாதங்களுக்கு [பால், மீன் எண்ணெய்] மற்றும் பல்வேறு வைட்டமின்களை உட்கொண்ட பிறகு, எனது கன்னங்கள் உப்பி, இடுப்பு* பெருத்துப் *போனது. [...] நான் கடந்து செல்லும்போதெல்லாம் கிராமத்தில் உள்ள பிள்ளைகள் ஒரு* நகைச்சுவைக் *கவிதையை உரக்கப் பாடினார்கள்:*
*Fatty, fatty bom-bom. Malam, malam churi jagong. (கொழுகொழு கன்னம், மாலை நேரத்தில் சோளம் திருடு)*

என் கனத்த நடையால் பூமி 'பொம்-பொம்' என அதிரும். இரண்டாவது வரி, நான் மிகவும் குண்டாக இருப்பதற்குக் காரணம், ஒவ்வோர் இரவும் சோளம் திருடி உண்பதுதான் என்று சொல்கிறது.

*ஜோசஃபின் சியா,*
*1950களில் தொடக்கப்பள்ளி மாணவி,*
*'தேங்காய் ஓட்டின் கீழ் தவளை' (Frog Under a Coconut Shell) என்ற புத்தகத்திலிருந்து ஒரு பகுதி.*

"[எனக்கு ஞாபகம் இருக்கிறது...] ஒரு பெரிய பாத்திரத்திலிருந்து ஒரு கோப்பையில் பால் ஊற்றி எங்களுக்குத் தருவார்கள். அதை ஆசிரியர்களுக்கு முன்பு வரிசையில் நின்று குடிக்க வேண்டும். ஒருவேளை யாருக்காவது பிடிக்காவிட்டால், அவர்கள் அதைக் கீழே ஊற்றிவிடக் கூடாது என்பதற்காக அப்படிச் செய்வார்கள். எனக்கு அந்தப் பால் (வெனிலா சுவையுடன்) மிகவும் பிடிக்கும். அந்தப் பாலைக் குடிக்கக் கிடைக்கும் நாள்களுக்காக நான் ஆவலுடன் காத்திருப்பேன்.

ஓங் லீ பின்
1970களில் தொடக்கப்பள்ளி மாணவி
சிங்கப்பூர் நினைவுத் திட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பு.


## "ஃபயர் நீடில்" (நெருப்பு ஊசி) மற்றும் கசப்பான திரவம்

பாகிலஸ் கால்மெட்-குவெரின் (Bacillus Calmette-Guérin - BCG) தடுப்பூசி திறந்த நெருப்பில் கிருமிகளை நீக்கப் பயன்படுத்தப்பட்டதால், "நெருப்பு ஊசி" என்று செல்லப்பெயர் பெற்றது. 1951ல், காலனித்துவ அரசாங்கம் காசநோய்க்கு எதிராகப் போராட ஒரு பிசிஜி தடுப்பூசித் திட்டத்தைத் தொடங்கியது. அந்த நேரத்தில், காசநோய் சிங்கப்பூரில் இறப்புக்கான முக்கியக் காரணமாக இருந்தது.

1956 முதல் 1972 வரை, ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் போடப்பட்டன. இதன் மூலம் 90 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட பச்சிளம் குழந்தைகளும், தொடக்கப்பள்ளி மாணவர்களும், 75

விழுக்காட்டு உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் பாதுகாக்கப்பட்டனர். 2023ஆம் ஆண்டளவில், இரண்டு வயதுக் குழந்தைகளுக்கான தடுப்பூசிப் பாதுகாப்பு 97.6 விழுக்காடாக உயர்ந்தது. 2001-இல், 12 அல்லது 16 வயதினருக்கான பூஸ்டர் ஊசிகள் தேவையில்லை என ஆதாரங்கள் காட்டியதால், அவை நிறுத்தப்பட்டன. இவ்வாறு, சிங்கப்பூரில் பல தலைமுறை மாணவர்களுக்கு வலிமிகுந்த அனுபவமாக இருந்த இந்தத் தடுப்பூசி போடும் வழக்கம் ஒரு முடிவுக்கு வந்தது.

பிசிஜி ஊசியைப் போலன்றி, சேபின் இளம்பிள்ளைவாதத்திற்கான (Sabin polio) தடுப்பூசி, ஒரு தேக்கரண்டி கசப்பான திரவமாக விழுங்கப்பட்டது. சில சமயங்களில், கசப்புத்தன்மையைக் குறைக்க, சிரப் அல்லது சர்க்கரையுடன் சேர்த்து விழுங்கப்பட்டது. 1958ல் உள்ளூரில் பெருமளவில் பயன்படுத்தப்பட்ட இந்தத் தடுப்பூசி, 1962-இல் மற்றோர் இயக்கத்திற்குப் பிறகு குழந்தைகளுக்கான வழக்கமான நோய் எதிர்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாறியது. 1975ஆம் ஆண்டளவில், ஏராளமான மக்களுக்குத் தடுப்பூசி போடப்பட்டது. 2000ஆம் ஆண்டில், சிங்கப்பூர் அதிகாரபூர்வமாக இளம்பிள்ளைவாதம் அற்ற நாடாக அறிவிக்கப்பட்டது. இன்று, பச்சிளம் குழந்தைகளுக்குத் இந்தத் தடுப்பூசி போடப்படுகிறது, அதோடு, தொடக்கநிலை 5ஆம் வகுப்பில் ஒரு பூஸ்டர் தடுப்பூசியும் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| <br>B.C.G. TESTING AND VACCINATION<br>St. Anthony's Boys' School<br>IVA Standard<br>Name<br>Age 11/8 Sex M No. 19<br>Tuberculin Test +8<br>B.C.G. Vaccine<br>DR. LAI KUEN YEE,<br>Health Officer, Schools, L.H.O. S.T.O.<br>Singapore.<br>L.H.O.S., H.O.S. | லிம் இயூ துவங் என்பவரின் பிசிஜி (BCG) பரிசோதனை மற்றும் தடுப்பூசிச் சான்றிதழ்<br>18 ஜூன் 1954.<br>மறுஉருவாக்கம்<br>கல்வி அமைச்சு மரபுடைமை நிலையத்தின் தொகுப்பு |

| | |
|---|---|
|  | கான்வென்ட் ஆஃப் தி ஹோலி இன்ஃபன்ட் ஜீசஸ் பள்ளியில் பிசிஜி தடுப்பூசி போட்டுக்கொள்ள மாணவர்கள் வரிசையில் நிற்கின்றனர்<br>5 ஜூன் 1951.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது |
|  | ஜூ சியாட் குழந்தைகள் சமூக மையத்தில் சிறுவன் ஒருவன் பிசிஜி தடுப்பூசி போட்டுக்கொள்கிறான்.<br>14 செப்டம்பர் 1951.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | லிம் ஆ பின் சாலையில் உள்ள மருத்துவ நிலையம் ஒன்றில் சேபின் தடுப்பூசி பெறுவதற்குச், சிறுவன் ஒருவன் காத்திருக்கிறான்.<br>21 அக்டோபர் 1958.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |



லிம் ஆ பின் சாலையில் உள்ள மருத்துவ நிலையம் ஒன்றில் சிறுவன் ஒருவன் சேபின் தடுப்பூசி போட்டுக்கொள்கிறான். 21 அக்டோபர் 1958.
தகவல், கலைகள் அமைச்சின் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.

ஊசி போடும் அன்று காலை, வகுப்புகள் ரத்து செய்யப்பட்டிருந்தாலும், யாருடைய முகத்திலும் புன்னகை இல்லை. நாங்கள் வரிசையில் காத்திருந்தபோது, என் நண்பர்களில் சிலர் தங்கள் முன்கையின் உட்புறத்தை கிள்ளவும், அறையவும் தொடங்கினர்.

"அப்படிச் செய்தால் அடையாளம் பெரிதாகிவிடும், பிறகு உனக்கு பிசிஜி ஊசி தேவைப்படாது," என்று என் வகுப்புத் தோழர்களில் ஒருவன் விளக்கினான்.

*ஜேமி கோ,*
*1989ல் தொடக்கப்பள்ளி 6ஆம் வகுப்பு மாணவர்,*
*'சிங்கப்பூர் குழந்தைப் பருவம்: நமது அன்றைய மற்றும் இன்றைய கதைகள்'*
என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

உண்மையான அடையாளத்தையும், அவர்களால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அடையாளத்தையும் எங்களால் வேறுபடுத்த முடியும். ஊசி போடத் தேவைப்படாது என்பதற்காகத் தங்களை 'சாதாரணமாக' மாற்றிக்கொள்ள மாணவர்கள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வார்கள். அவர்கள் எதையாவது செய்துகொள்ளப் பார்ப்பார்கள் - தங்களை அறையவும் கிள்ளவும் செய்து அடையாளத்தைச் சீண்டிப் பார்ப்பார்கள்.

டாக்டர் உமா ராஜன்,
பள்ளி சுகாதாரச் சேவைகளின் இயக்குநர், 1991 - 1998,
*'சிங்கப்பூர் குழந்தைப் பருவம்: நமது அன்றைய மற்றும் இன்றைய*


*கதைகள்'*
என்ற புத்தகத்திலிருந்து ஒருபகுதி.

**இதுதான் பல் துலக்கும் முறை**

1969ஆம் ஆண்டில், தினசரி பற்களைச் சுத்தம் செய்யும் பழக்கத்தை வளர்க்கவும் பல் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அனைத்துத் தொடக்கப்பள்ளிகளிலும் கட்டாயப் பல் துலக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தக் காலகட்டத்தில், 50 விழுக்காட்டிற்கும் அதிகமான பள்ளி மாணவர்கள் பல் துலக்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை. பல் துலக்கியவர்களில், 75 விழுக்காட்டினர் தவறான முறையைப் பயன்படுத்தினர். அவர்கள் வயலின் வாசிப்பதைப் போல, பற்களைக் கிடைமட்டமாகத் துலக்கினர்.

பல் சுகாதார இயக்கத்தை ஆதரிக்க, கிட்டத்தட்ட 2,680 ஆசிரியர்கள் இடைவேளைக்குப் பிந்தைய பல் துலக்கும் பயிற்சிகளைச் சரியாக மேற்பார்வையிடப் பயிற்சி பெற்றனர். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பல் துலக்கியும் (toothbrush) ஒரு பிளாஸ்டிக் குவளையும் (mug) 25 காசு செலவில் வழங்கப்பட்டன. 1969ஆம் ஆண்டின் இறுதியில், 439 தொடக்கப்பள்ளிகளைச் சேர்ந்த மொத்தம் 367,735 குழந்தைகள் பல் துலக்கும் பயிற்சிகளில் பங்கேற்றனர்.

இன்று பள்ளிகளில் பல் துலக்குவது கட்டாயமில்லை என்றாலும், பல் ஆரோக்கியம் ஒரு முக்கியப் பணியாக உள்ளது. 7 முதல் 18 வயது வரையிலான மாணவர்கள் பள்ளி பல் மருத்துவ நிலையங்களில் இலவச அடிப்படை பல் பராமரிப்பைப் பெறலாம்.

| | |
|---|---|
|  | பல் சுகாதார இயக்கத்தின் ஒரு பகுதியாகக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட பல் துலக்கி (toothbrush) மற்றும் குவளை (mug).<br>சுமார் 1990கள்.<br>கல்வி அமைச்சு மரபுடைமை நிலையத்தின் தொகுப்பு. |
|  | தெலுக் ஆயர் தொடக்கப்பள்ளியில் பல் துலக்கும் இயக்கத்தைச் சுகாதார அமைச்சர் திரு சுவா சியான் சின் (வலமிருந்து இரண்டாவது) மேற்பார்வையிட்டபோது.<br>4 பிப்ரவரி 1969.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | லீ டெக் பப்ளிக் பள்ளி மாணவர்கள் வடிகாலுக்கு அருகில் பல் துலக்குகிறார்கள்.<br>1970கள்.<br>ஹோ சின் ஜியோக் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. |

| | |
|---|---|
| <br> | பள்ளி வளாகத்திற்குள் நிறுத்தப்பட்ட நடமாடும் பல் மருத்துவமனை.<br><br>நடமாடும் பல் மருத்துவமனை ஒன்றில் மாணவர்கள் பற்களைப் பரிசோதனை செய்கின்றனர்.<br>24 மே 1971.<br>தகவல், கலைகள் அமைச்சின் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. |
|  | பாலர் பள்ளிக் குழந்தைகளுக்குப் பல் துலக்கும் முறையை ஓர் ஆசிரியர் விளக்கிக் காட்டுகிறார்.<br>8 பிப்ரவரி 1973.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | பல் துலக்கக் கற்றுக்கொள்ளும்போது, பல் மாதிரி ஒன்றைப் பார்க்கும் பாலர் பள்ளிப் பிள்ளைகள்.<br>23 அக்டோபர் 2002.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா |



| | |
|---|---|
| | லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
| கடும் வெயிலில் தலைகள் மேலும் கீழும் ஆட,<br>நீண்ட, குறுகிய வடிகாலுக்கு மேல்,<br>நாங்கள் குனிந்து, வாய் கொப்பளித்து,<br>துப்பி (கா-புய் என ஒலியெழுப்பி), சிரித்துக் கொண்டோம்.<br>பார்க்க அழகாக இல்லை என்பதில் சந்தேகமில்லை;<br>ஆனால் அதுதான்,<br>எங்கள் 80-களின் பாணியிலான<br>பல் துலக்கும் முறை.<br><br>*செரீனா ஹோ,*<br>*1980களில் தொடக்கப்பள்ளி மாணவி,*<br>*'சிஎன்ஏ' ஆவணப்படம், 'கேம்பைன் நேஷன்'-லிருந்து (Campaign Nation) எடுக்கப்பட்டது.* | |

## <u>தீங்கு விளைவிக்கும் பொருள்களை 'வேண்டாம்' எனச் சொல்லுங்கள்</u>

ஜூன் 1995-இல் தொடங்கப்பட்ட போதைப்பொருள் எதிர்ப்பு இயக்கத்தின் ஒருபகுதியாக, ஒவ்வோர் ஆண்டும் பள்ளிகளில் பச்சை நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் ரிப்பன்கள் விநியோகிக்கப்படுகின்றன. முன்னதாக, 1970கள் மற்றும் 1980களில், இளையர்களின் குற்றங்கள் கணிசமாக அதிகரித்ததால், போதைப்பொருள் பயன்பாடு, உறிஞ்சி உள்ளிழுக்கும் போதைப்பொருள் பயன்பாடு, மற்றும் புகைபிடித்தல் ஆகியவற்றைத் தடுப்பதை இலக்காகக் கொண்ட பல்வேறு இயக்கங்கள் தொடங்கப்பட்டன.

பல ஆண்டுகளாகக் குடும்பங்களுடன் இணைந்து விழுமியக் கல்வியில் பள்ளிகளின் முக்கியப் பங்கை இந்த இயக்கங்கள் வலியுறுத்துகின்றன. போதைப்பொருள்கள், புகைபிடித்தல் மற்றும் மின்சிகரெட்டுக்கு எதிரான செய்திகள், உடற்பயிற்சி, அறிவியல்,

மற்றும் நற்குணமும் குடியியல் கல்வியும் (CCE) போன்ற பாடங்களில் தொடர்ந்து இணைக்கப்பட்டு வருகின்றன.

<table>
<tr>
<td>
</td>
<td>போதைப்பொருள்களிலிருந்து விலகி இருக்குமாறு மாணவர்களை வலியுறுத்தும் சுவரொட்டி.<br>1977.<br>சிங்கப்பூர் போதைப்பொருள் தடுப்புச் சங்கம் வழங்கியது.</td>
</tr>
<tr>
<td>
</td>
<td>நிக் ஓ'டீன் (நிக்கோட்டின்) என்ற போதைப்பொருளின் கவர்ச்சியில் சிக்காமல் மாணவர்களை எச்சரிக்க, புகையிலை எதிர்ப்பு இயக்கத்தில் சூப்பர்மேன் ஈடுபடுத்தப்பட்டார்.<br>1983.<br>சுகாதார அமைச்சின் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.</td>
</tr>
<tr>
<td>
</td>
<td>10 முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளை இலக்காகக் கொண்ட, சூப்பர்மேன் இடம்பெற்ற புகையிலை எதிர்ப்பு இயக்கச் சுவரொட்டி .<br>1983.<br>சுகாதார அமைச்சின் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.</td>
</tr>
</table>

| | |
|---|---|
|  | தொடக்கநிலை 4ஆம் வகுப்பு மாணவர்களுக்கான போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கை ஏடு.<br>2024.<br>மத்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு வழங்கியது.<br><br>இந்தப் புத்தகம் மாணவர்கள் போதைப்பொருள்களின் தீமைகளைப் புரிந்துகொள்ளவும், போதைப்பொருள் தொடர்பான தாக்கங்களையும் தூண்டுதல்களையும் எதிர்க்க உதவுகிறது. |

## ஆரோக்கியமான வாழ்க்கைமுறையையும் உணவுப் பழக்கங்களையும் நோக்கி

1980களுக்குள், சிங்கப்பூரில் ஊட்டச்சத்துக் குறைபாடு என்பது அதிகம் கவனத்தை ஈர்த்த பிரச்சினையாகப் பார்க்கப்படவில்லை. ஆனால், உடல் பருமனாலும் உடல் உழைப்பின்மையாலும் ஏற்படும் பிற பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கின. எனவே, உடற்பயிற்சியையும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும் ஊக்குவிக்கும் இயக்கங்கள் உருவாக்கப்பட்டன.

1993-இல் தேசிய ஆரோக்கிய வாழ்க்கைமுறை இயக்கத்தின் ஒரு பகுதியாக, தொடக்கப்பள்ளி முதல் தொடக்கக்கல்லூரி வரையிலான மாணவர்களுக்கான "எல்லாப் பிள்ளைகளும் ஒரே நேரத்தில் உடற்பயிற்சி செய்கிறார்கள்" (All Children Exercise Simultaneously - ACES) என்ற நாள் 'கிரேட் சிங்கப்பூர் வொர்க்அவுட்' என்ற இசையுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. மிக அண்மையில், 2016ல், ஏறத்தாழ 20,000 உயர்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கக்கல்லூரி மாணவர்கள், "ரெப் வித் ஸ்டெப்ஸ்" (Rep with Steps) போட்டியில் சேர்ந்தனர். தேசிய 'ஸ்டெப்ஸ் சேலஞ்ச்' என்பதோடு ஒருங்குசேரும் வகையில், இந்தப்

பள்ளிகளுக்கு இடையிலான போட்டி, ஒரு மாணவரின் சராசரி தினசரி படியேறும் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகம் ஏறப்பட்ட படிகளின் எண்ணிக்கை கொண்ட பள்ளிகளுக்குப் பரிசுகளை வழங்கியது.

சுறுசுறுப்பான வாழ்க்கை முறையோடு, இன்றைய மாணவர்கள் "எனது ஆரோக்கியமான தட்டு" (My Healthy Plate) போன்ற காட்சி உதவிக் கருவிகளின் துணையுடன் சமச்சீரான உணவு முறையைப் பின்பற்றுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆரோக்கியமான உணவு இயக்கங்கள் 1980களில் இனிப்புகளுக்கும் தின்பண்டங்களுக்கும் தடை விதிப்பது முதல், 2011இல் "பள்ளிகளில் ஆரோக்கிய உணவுத் திட்டம்" (Healthy Meals in Schools Programme) வரை, பள்ளி உணவகங்களுக்கான விதிமுறைகளை மனத்திற்கொண்டு செயற்படுகின்றன. இவை ஒன்றாக, மாணவர்களின் உணவில் கொழுப்பு, சர்க்கரை உப்பு ஆகியவற்றைக் குறைவாகவும், முழுத் தானியங்கள், பழங்கள் , காய்கறிகள் அதிகமாகவும் இருப்பதை உறுதி செய்கின்றன.

| | |
|---|---|
|  | மாணவர்கள் ஏசஸ் (ACES) தினத்தின் போது 'கிரேட் சிங்கப்பூர் வொர்க்அவுட்' செய்கின்றனர்.<br>1993.<br>சிங்கப்பூர் தேசிய நூலகத் தொகுப்பு, சுகாதார அமைச்சு வழங்கியது. |
|  | உட்குரோவ் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், சுகாதாரத் துறைக்கான மூத்த நாடாளுமன்றச் செயலாளர் திரு சீ ஹோங் டாட் அவர்களுடன் இணைந்து "ரெப் வித் |

<table>
<tr><td></td><td>ஸ்டெப்ஸ்" (Rep with Steps) தொடக்க விழாவில் உடற்பயிற்சி செய்கின்றனர்.<br>1 மார்ச் 2016.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>


</td><td>ஆரோக்கியமான, சமச்சீரான உணவுகளை ஊக்குவிக்கும் வகையில், தொடக்கப்பள்ளிகளுக்கான 'எனது ஆரோக்கியமான தட்டு' என்ற காட்சி வழிகாட்டிச் சுவரொட்டிகள்.<br>2023.<br>சுகாதார மேம்பாட்டு வாரியம் வழங்கியது.</td></tr>
<tr><td colspan="2">'நீங்களே ஓர் உதாரணமாக இருந்து (ஆரோக்கியமாகச் சாப்பிடுவதைப்) பின்பற்ற வேண்டும், இல்லையென்றால் மாணவர்கள் நீங்கள் சொல்வதெல்லாம் வெற்று வார்த்தைகள் என நினைப்பார்கள். அவர்களைச் செய்யுமாறு ஊக்குவிக்கும் விஷயங்களை நானும் செய்கிறேனா என்பதை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.'<br><br>திருமதி ஈ. எஸ். லியூக்,<br>மார்சிலிங் தொடக்கப்பள்ளி ஆசிரியர்,<br>தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் நாளிதழிலிருந்து எடுக்கப்பட்டது, 6 ஏப்ரல் 1992.</td></tr>
</table>



**உடல்நலம் பேணுதல்**

சமூக ஊடகங்களின் வளர்ச்சியாலும் அண்மைய ஆண்டுகளில் மனநலனில் அதிகக் கவனம் செலுத்துவதன் காரணமாகவும், குழந்தைப் பராமரிப்பு முழுமையான அணுகுமுறையாக வளர்ந்துள்ளது. இது உடல் தேவைகளை வழங்குவதைத் தாண்டி, இணையம் மற்றும் மனநலம் போன்ற பிற அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

2009-இல் பள்ளிகளில் இணைய நல்வாழ்வு மாணவர் தூதர் திட்டம் தொடங்கப்பட்டது. இது நல்ல இணையப் பழக்கவழக்கங்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டது. நல்ல பழக்கங்களை ஊக்குவிக்கவும், உடன்பாடான சக மாணவர் தாக்கத்தின் கலாசாரத்தை உருவாக்கவும் மாணவர்களை இது ஊக்குவித்தது. மனநலனுக்கான சக ஆதரவு அமைப்புகள் 2021 முதல் அனைத்துப் பள்ளிகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் செயற்படுத்தப்பட்டுள்ளன. இது தேவை ஏற்படும்போது மாணவர்கள் தங்கள் நண்பர்களுக்கு ஆதரவாக முன்வருவதை ஊக்குவிக்கிறது.

இணையம் மற்றும் மனநலம் ஆகியவை 2021ல் செயல்படுத்தப்பட்ட நற்குணமும் குடியியல் கல்வியும் (CCE) பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன. தொழில்நுட்பத்தை விழிப்புணர்வுடன், பொறுப்புடன், மற்றும் நிதானமாகப் பயன்படுத்தும் பயனர்களாக மாணவர்களை வளர்ப்பதற்காக, இணைய நல்வாழ்வுக்கான பாட நேரம் இருமடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட நற்குணமும் குடியியல் கல்வியும் பாடத்திட்டத்தில் மனநலக் கல்வியும் சேர்க்கப்பட்டுள்ளது. இது மனவுறுதியையும், மனநலனையும் வலுப்படுத்துவதுடன், மாணவர்கள் மனவுளைச்சலின் அறிகுறிகளை அடையாளம் காணவும் உதவி பெறவும் தேவையான ஆதாரங்களைக் கொண்டுள்ளது.

<table>
<tr>
<td></td>
<td>வெஸ்ட் வியூ தொடக்கப்பள்ளி மாணவர்கள், பள்ளியின் புதிய இணைய நல்வாழ்வு திட்டத்தின் கீழ் பொறுப்பான இணைய நடத்தைக்கு உறுதியளிக்கின்றனர்.<br>12 பிப்ரவரி 2014.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>
</td>
<td>ஃபூஹுவா தொடக்கப்பள்ளியின் இணைய நல்வாழ்வு தூதர்களால் வடிவமைக்கப்பட்ட சுவரொட்டி.<br>2022.<br>ஃபூஹுவா தொடக்கப்பள்ளி வழங்கியது.</td>
</tr>
<tr>
<td>
</td>
<td>கல்வி அமைச்சின் மாணவர் மேம்பாட்டுப் பாடத்திட்டப் பிரிவால் வடிவமைக்கப்பட்ட இணைய நல்வாழ்வுக் கல்விச் சுவரொட்டி.<br>2021.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>
</td>
<td>கீழ் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான (Lower Secondary) நற்குணமும் குடியியல் கல்வியும் பாடத்திட்டத்தில் உள்ள மனநலப் பாடங்களுக்கு ஏற்ப, கல்வி அமைச்சின் தொடர்பு, ஈடுபாட்டுப் பிரிவால் வடிவமைக்கப்பட்ட விளக்கப்படங்களுடன் கூடிய தூண்டுதல்வழி உரையாடல்கள். 2021.</td>
</tr>
<tr>
<td>



</td>
<td>தொடக்கநிலை 3ஆம் வகுப்பு மாணவர்களுக்கான நற்குணமும் குடியியல் கல்வியும் (CCE) வழிகாட்டி வகுப்பு நேரப் பத்திரிகையில் (Form Teacher Guidance Period Journal) இணைக்கப்பட்ட இணைய நன்னடத்தைப் பாடம். 2022.</td>
</tr>
</table>

<u>ஒலி-ஒளிக் காட்சி முகவை - உடல்நலம் மற்றும் ஆரோக்கியம்</u>

| | |
|---|---|
|  | ***பால் குடிப்பது எனக்குப் பிடிக்கும்*** *(00:46)*<br>***சுமார்* 1980கள்**.<br>கல்வி அமைச்சின் ஆவணம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br><br>இந்தக் காணொளி, பள்ளி மாணவர்கள் இடைவேளையின் போது வரிசையில் நின்று பால் குடிப்பதைக் காட்டுகிறது. பாடலின் வரிகள் பால் குடிப்பதன் நன்மைகளை விளக்குகின்றன. |
|  | தி பிசிஜி டைரிஸ் (01:41)<br>2020.<br>சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம் வழங்கியது.<br><br>பிசிஜி தடுப்பூசியுடன் தொடர்புடைய சிங்கப்பூரின் நினைவுகளின் இந்த நகைச்சுவையான தொகுப்பு, "நெருப்பு ஊசி" விட்டுச் சென்ற அழியாத தழும்பைக் காட்டுகிறது. சிங்கப்பூரின் பொது சுகாதார நெருக்கடிகள் மற்றும் பதிலளிப்புகளின் வரலாற்றை ஆராயும், 'எவ்ரி பாடி பிளேஸ் எ பார்ட்' (Everybody Plays a Part) என்ற சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் |

| | |
|---|---|
| | இணையவழிக் கண்காட்சியின் ஒரு பகுதியாக இது உருவாக்கப்பட்டது. |
|  | 'இன் தி ஸ்கூல்' (பள்ளியில்) (02:20) சுமார் 1980கள்.<br>கல்வி அமைச்சின் ஆவணம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br><br>சீன மொழியில் உள்ள இந்தக் கல்விசார் காணொளி, சரியான பல் துலக்கும் முறையை விளக்குகிறது. மேலும் 'பல்' எனும் சீன எழுத்தை எப்படி எழுதுவது என்பதையும் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறது. |
|  | 'கிரேட் சிங்கப்பூர் வொர்க்அவுட்' (01:31)<br>11 ஜூலை 1994.<br>சுகாதார அமைச்சின் ஆவணம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br><br>இந்த விளம்பரப் பாடல், 'கிரேட் சிங்கப்பூர் வொர்க்அவுட்டை' விளம்பரப்படுத்துகிறது. ஏழு முதல் 70 வயது வரையிலான எவருக்கும் ஏற்ற, 15 பயிற்சிகளைக் கொண்ட, குறைந்ததாக்கமுள்ள ஓர் ஏரோபிக் பயிற்சித் திட்டம் இது. |

| | |
|---|---|
| | 1993ல் தேசிய ஆரோக்கியமான வாழ்க்கைமுறைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டது. |

## தூய்மையும் பசுமையும்

தோட்ட நகரத்திலிருந்து (Garden City) தோட்டத்திற்குள் ஒரு நகரமாக, (City in a Garden), தற்போது இயற்கைக்குள் ஒரு நகரமாக (City in Nature), சிங்கப்பூரின் பசுமை நோக்கம் 1960களிலிருந்து வெகுதூரம் கடந்து வந்துள்ளது. இந்தப் பயணத்தை ஆதரிக்கும் வகையில், ஆசிரியர்கள் துடைப்பம், துணி, மண்வெட்டி போன்ற கருவிகளுடன் மாணவர்களை அணிதிரட்டி, முன்னுதாரணமாக வழிநடத்திச் சென்றுள்ளனர்.

காலப்போக்கில், விதிமுறைகளை மையமாகக் கொண்டு தொடங்கப்பட்ட இயக்கங்கள், தற்போது ஆண்டு முழுவதும் நடைபெறும் 'தூய்மையும் பசுமையும் சிங்கப்பூர்' இயக்கத்தின் மூலம், அன்றாட வாழ்வில் சுற்றுச்சூழலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வளர்ந்துள்ளன. மாணவர்கள் இப்போது உண்பதற்குரிய விளைபொருள்களைத் தரும் தோட்டங்கள், சூரிய மின்தகடுகள் அல்லது  உயிரி செரிப்பான்கள் (biodigesters) போன்றவற்றின் பயன்பாட்டின் மூலம் தங்கள் பள்ளிச் சூழலில் நிலைத்தன்மையைப் பற்றி அறிந்து கொள்கிறார்கள். 2021ல் அறிமுகப்படுத்தப்பட்ட **சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுத் திட்டத்தின்**கீழ், (Eco Stewardship Programme) மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் சுற்றுச்சூழல்  பாதுகாவலர்களாகத் திகழ்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். அடுத்த தலைமுறையை ஊக்குவிக்கும் வகையில், ஆசிரியர்கள் முன்மாதிரியாகச் செயற்பட்டு, பூமியைப் பாதுகாக்க அவர்களுக்கு வழிகாட்டுகிறார்கள்.

**<u>பசுமையான நகரத்தை வளர்ப்பது</u>**

சிங்கப்பூரின் 'இயற்கைக்குள் ஒரு நகரம்' (City in Nature) என்ற மாற்றம், 1963ல் பிரதமர் லீ குவான் யூ தலைமையில் தொடங்கப்பட்ட முதல் மரம் நடும் இயக்கத்துடன் தொடங்கியது. மழைப்பொழிவை அதிகரிக்கவும் சிங்கப்பூரை வாழ்வதற்கு மகிழ்ச்சியான இடமாக மாற்றவும் ஆண்டுதோறும் 10,000 மரங்களை நடுவது இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இதில் 5,000 மரங்கள் பள்ளிகளிலும் பிற பொது இடங்களிலும் நடப்பட்டன. 1966ஆம் ஆண்டுக்கும் 1968ஆம் ஆண்டுக்கும் இடையில், 6,500 மரங்கள் பள்ளிகளில் நடப்பட்டன. அவை சுற்றியுள்ள சமூகத்திற்கு நிழலையும் வழங்கின.

1967ல், அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் சிங்கப்பூர் "மலர்களையும் மரங்களையும் கொண்ட ஓர் அழகான தோட்ட நகரமாகவும், இயன்றவரை சுத்தமாகவும், குப்பைகளற்றதாகவும்" மாற வேண்டும் என்று பிரதமர் லீ ஒரு புதிய தொலைநோக்குப் பார்வையை முன்வைத்தார். நாடு உடனடியாகச் செயற்பட்டு, 1970க்குள் 55,000க்கும் மேற்பட்ட மரங்களை நட்டது. அடுத்த ஆண்டில், 'மரம் நடும் நாள்' உருவானது. ஒவ்வொரு நவம்பர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் இந்த விழாவில், முதன்முதலாக 52 பள்ளிகள் கிட்டத்தட்ட 592 மரங்களை நட்டன.

ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு, தீவு முழுவதும் 7 மில்லியனுக்கும் அதிகமான மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. ஒரு மில்லியன் கூடுதல் மரங்களை நட்டு, சிங்கப்பூரை 'இயற்கை நகரமாக' வளர்ப்பதற்கான 'ஒரு மில்லியன் மரங்கள் இயக்கம்' (OneMillionTrees movement) என்பதற்குப் பள்ளிகள் தொடர்ந்து வலுவான பற்றாளர்களாக உள்ளன. சில பள்ளிகள் கல்வி அமைச்சின் 'சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுத் திட்டத்தின்'கீழ், (Eco Stewardship Programme) உண்பதற்குரிய விளைபொருள்களைத் தரும் தோட்டங்களையும் மற்றும் செங்குத்துநிலைத் தோட்டங்களையும் உருவாக்கியுள்ளன. 'ஒரு மில்லியன் மரங்கள் இயக்கம்' மற்றும் 'சுற்றுச்சூழல் பொறுப்புணர்வுத் திட்டம்' ஆகிய இரண்டும் 'சிங்கப்பூர் பசுமைத் திட்டம் 2030'இன் (Singapore Green Plan 2030) ஒரு பகுதியாகும்.

இது 2021ல் அறிமுகப்படுத்தப்பட்ட, நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நாடு தழுவிய முயற்சியாகும்.

| | |
|---|---|
|  | அனைத்துப் பள்ளிகளுக்கான மரம் நடுதல் மற்றும் தோட்டப் பராமரிப்புப் போட்டியில் வெற்றி பெற்ற செயிண்ட் ஜோசப் கான்வென்ட் பள்ளி மாணவர்கள் தோட்டத்தைப் பராமரிக்கின்றனர்.<br>4 அக்டோபர் 1968.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | பாசிர் ரிஸ் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் நீர் வளர்ப்பு முறையில் விளைந்த காய்கறிகளைத் தங்கள் பள்ளி உணவக விற்பனையாளர்களுக்குப் பரிசாக அறுவடை செய்கின்றனர்.<br>2024.<br>பாசிர் ரிஸ் உயர்நிலைப்பள்ளி வழங்கியது. |
|  | செயிண்ட் ஆண்ட்ரூஸ் பள்ளியில் தொடக்கநிலை ஆறாம் வகுப்பு மாணவர்கள் மரம் நடும் நிகழ்வில் பங்கேற்கின்றனர்.<br>4 நவம்பர் 1971. |

| | |
|---|---|
| | வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | தேசியப் பூங்காக் கழகத்தின் 'ஒரு மில்லியன் மரங்கள் இயக்கத்திற்கு' ஆதரவு அளிக்கும் வகையிலும், தங்கள் பள்ளியின் 65வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையிலும், நேவல் பேஸ் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் மரம் நடுகின்றனர்.<br>2022.<br>நேவல் பேஸ் உயர்நிலைப்பள்ளி வழங்கியது. |

திடீரென்று இவ்வாண்டு சிங்கப்பூர்ப் பள்ளிகளின் நிலப்பரப்பு மாறிவிட்டது. அதுவும் வியக்கத்தக்க அளவில் அந்த மாற்றம் நிகழ்ந்தது.

மந்தமான சமவெளிகளும் சேற்றுக்குட்டைகளும் மறைந்து கையால் வளர்க்கப்பட்ட தோட்டங்களாகவும், பூச்செடிகளாகவும், நிழல் தரும் பெரிய மரங்களாகவும், மென்மையான ஒலியை எழுப்பும் பாறைத் தோட்டங்களாகவும், பசுமையான, புத்துணர்ச்சி தரும் இலைகளாகவும் மாறியது, பாதி சொர்க்கத்தைப் போல் காட்சியளிக்கிறது.

தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்
20 அக்டோபர் 1968

| | |
|---|---|
| <br> | செயிண்ட் ஆண்ட்ரூஸ் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திருவாட்டி சார்லீன் டான், 'தி கிரீன் என்வாய்ஸ்' (The Green Envoys) என்ற மாணவர் குழுவிற்குத் தலைமை தாங்குகிறார். இந்தக் குழு, உண்பதற்குரிய தாவரங்களை வளர்ப்பது போன்ற திட்டங்களைத் தொடங்கியுள்ளது.<br>29 அக்டோபர் 2024.<br><br>செயிண்ட் ஆண்ட்ரூஸ் உயர்நிலைப்பள்ளி வழங்கியது.<br><br><br>மதிப்பெண்களை மட்டும் கருதாமல், சமூகத்தின் நலனில் அக்கறையுடன் இருக்க மாணவர்களை ஊக்குவிப்பதே எனது மிகப்பெரிய சாதனை.<br>திருவாட்டி சார்லீன் டான் ஆசிரியை, செயிண்ட் ஆண்ட்ரூஸ் உயர்நிலைப்பள்ளி.<br>கல்வி அமைச்சின் Schoolbag.edu.sg என்ற இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டது. |


**<u>சுத்தம் செய்யுங்கள், சுத்தம் செய்யுங்கள், எங்கும் எல்லோரும்</u>**

சிங்கப்பூரை அழகுபடுத்துவதற்காக நடத்தப்பட்ட மிக முந்தைய இயக்கங்களில் ஒன்று, 1958ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 'உங்கள் நகரத்தைத் தூய்மையாக வைத்திருங்கள்' (Keep Your City Clean)

இயக்கம். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தவும், தொழில்துறையையும் சுற்றுலாவையும் மேம்படுத்தவும் 'சிங்கப்பூரைத் தூய்மையாக வைத்திருங்கள்' (Keep Singapore Clean) இயக்கம் தொடங்கப்பட்டது. துடைப்பங்கள் மற்றும் துணிகளுடன் மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் பள்ளிகளையும் சுற்றுப்புறங்களையும் சுத்தம் செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

1990ஆம் ஆண்டில், 'சிங்கப்பூரைத் தூய்மையாக வைத்திருங்கள்' இயக்கமும் 'தோட்ட நகரம்' இயக்கமும் இணைந்து, ஒவ்வொரு நவம்பர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை முதல் ஆண்டுதோறும் நடத்தப்படும் 'தூய்மையும் பசுமையும் வாரம்' (Clean and Green Week) என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இந்தப் புதிய இயக்கம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, பொறுப்புணர்வு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் மனப்பான்மையையும் விழுமியங்களையும் வடிவமைக்க, ஒரு முழுமையான அணுகுமுறையை எடுத்தது. இது இதற்கு முன்பு இருந்த மேலிருந்து கீழ் என்ற விதிமுறைகள் சார்ந்த அணுகுமுறையிலிருந்து மாறுபட்டது. 2007ல், இந்த இயக்கம் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் 'தூய்மை மற்றும் பசுமை சிங்கப்பூர்' (Clean and Green Singapore) இயக்கமாக வளர்ந்தது. இது சுற்றுச்சூழல் உணர்வுடன் கூடிய வாழ்க்கைமுறையை ஊக்குவித்தது.

இன்று, பள்ளிகள் தினசரி சுத்தம் செய்யும் வழக்கங்கள் மூலம் மாணவர்களின் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை வளர்த்து வருகின்றன. 2014ல் தொடங்கப்பட்ட, மாணவர்களால் வழிநடத்தப்பட்டு பள்ளிகளால் ஆதரிக்கப்படும் **'சிங்கப்பூரைத் தூய்மையாக வைத்திருங்கள் இயக்கம்'** (Keep Singapore Clean Movement) என்பது நற்குணமும் குடியியல் கல்வியும் (CCE) பாடங்களில் கற்பிக்கப்படும் பொறுப்பு மற்றும் அக்கறை போன்ற விழுமியங்களை வலுப்படுத்துகிறது. இந்தக் கற்றலை ஆழப்படுத்த, 2016ல், நாடு முழுவதும் தொடக்கப்பள்ளியில் இருந்து தொடக்கக்கல்லூரி வரையிலான அனைத்துப் பள்ளிகளும் குறைந்தபட்சம் ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வரை தினசரி சுத்தம் செய்யும் பழக்கத்தை அறிமுகப்படுத்தின.

| | |
|---|---|
|   | 'சிங்கப்பூரைத் தூய்மையாக வைத்திருங்கள்' இயக்கத்தின் தொடக்கத்திற்கு ஆதரவாக, ஆசிரியர்கள், பயிற்சிக் கல்லூரி (Teachers' Training College - TTC) மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் வளாகத்தைச் சுத்தம் செய்கிறார்கள்.<br>1 அக்டோபர் 1968.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | 'சிங்கப்பூரைத் தூய்மையாகவும் மாசு இல்லாததாகவும் வைத்திருங்கள்' இயக்கத்துடன் இணைந்து நடத்தப்பட்ட பள்ளித் தூய்மைப் போட்டியில், மிகத் தூய்மையான தொடக்கப்பள்ளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னட் தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் தோட்டத்தைச் சுத்தம் செய்கின்றனர்.<br>25 அக்டோபர் 1971.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
|  | சுவா சூ காங் அரசாங்க சீனத் தொடக்கப்பள்ளியின் 'பள்ளியைத் தூய்மையாக வைத்திருங்கள்' இயக்கத்தில் ஆசிரியர்கள் தலைமை ஏற்கிறார்கள். 1970கள் சுவா சூ காங் அரசாங்கத் தொடக்கப்பள்ளித் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. |
|  | சிங்கப்பூரைத் தூய்மையாகவும், மாசற்றதாகவும் வைத்திருங்கள்' இயக்கத்துடன் இணைந்து, மெக்பர்சனில் மாணவர்கள் ஒரு திறந்தவெளியைச் சுத்தம் செய்கிறார்கள். 3 அக்டோபர் 1971. வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | 'தூய்மை மற்றும் பசுமை வாரம்' இயக்கத்தின் ஒருபகுதியாக, ஜூரோங் தொடக்கக்கல்லூரி மாணவர்கள் ஓர் உணவங்காடி நிலையத்தைச் சுத்தம் செய்கின்றனர். 3 நவம்பர் 2003. |

| | |
|---|---|
| | வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | தினசரி சுத்தம் செய்யும் பணியின் போது, சிங்னான் தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்கிறார்கள்.<br>25 பிப்ரவரி 2016.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | ஐம்பது ஆண்டுகள் இடைவெளியில் - பள்ளிகளைத் தூய்மையாக வைத்திருக்க, வகுப்பறை மேசைகளைத் துடைக்கும் மாணவர்கள்.<br>1970கள்.<br>சுவா சூ காங் அரசாங்கத் தொடக்கப்பள்ளி தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br>2024.<br>சிஹெச்ஜஜே கெல்லாக் (CHIJ Kellock) வழங்கியது. |




உயர்நிலைப்பள்ளிகளுக்கான 'தூய்மை மற்றும் பசுமை சிங்கப்பூர்' இயக்கச் சுவரொட்டி. 2016.
தேசியச் சுற்றுப்புற அமைப்பு வழங்கியது.

1990-இல் அறிமுகப்படுத்தப்பட்ட, கேப்டன் கிரீன் (Captain Green) என்பது கலகலப்புமிக்க ஒரு தவளை. மேலும், அது 'தூய்மை மற்றும் பசுமை' இயக்கத்தின் சின்னமாக உள்ளது தூய்மையான, பசுமையான மற்றும் நிலைத்தன்மை மிக்க வாழ்க்கை முறையை மேற்கொள்வதன் மூலம், நமது சுற்றுச்சூழலைக் கவனித்து, அதைப் பாதுகாக்க சிங்கப்பூரர்களுக்கு அது ஊக்கமளிக்கிறது.

'தூய்மை மற்றும் பசுமை சிங்கப்பூர்' பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து cgs.gov.sg என்ற வலைத்தளத்திற்குச் செல்லவும்.

அவள் [என் மகள்] இரவு உணவுக்குப் பிறகு கரண்டி, முள் கரண்டி, தட்டுகளை எப்படிக் கழுவுவது என்று அவளது அம்மாவிடம் கேட்கத் தொடங்கினாள்...பள்ளிக்கூடம் மாணவர்களுக்குக் [சுத்தத்தின் முக்கியத்துவத்தைக்] கற்பிப்பதில் நல்ல வேலையைச் செய்திருக்கிறது என்பதை நான் உணர்ந்தேன்.

ஓங் பூன் லியோங்
சிங்னான் தொடக்கப்பள்ளியில் படிக்கும் 9 வயது அனிசா ஓங்கின் தந்தை
டுடே (Today) நாளிதழிலிருந்து, 25 பிப்ரவரி 2016ல் எடுக்கப்பட்டது.

**உன் கைகளைப் பயன்படுத்து**

'உன் கைகளைப் பயன்படுத்து' (Use Your Hands) இயக்கம், சுற்றுச்சூழல் இயக்கங்களிலிருந்து வேறுபட்ட நோக்கத்தைக் கொண்டிருந்தபோதிலும், பெரும்பாலும் அது பள்ளி வளாகத்தைச் சுத்தப்படுத்துதல் மற்றும் பசுமையாக்குதல் போன்ற நிலைகளிலேயே இயங்கியது. 1976-இல் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, வாழ்க்கைத் தரம் மேம்பட்டதால், சிங்கப்பூரர்கள் "தூய்மையானதும் நல்லதுமான" வேலைகளுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கும் மனப்பான்மையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. உடல் உழைப்பு சார்ந்த வேலைகளைச் செய்யத் தயங்கியதால், வேலையில்லாத சிங்கப்பூரர்கள் பலர் இருந்தபோதிலும், வெளிநாட்டுத் தொழிலாளர்களை அதிகம் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அரசியல் தலைவர்கள், பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இந்த 'உன் கைகளைப் பயன்படுத்து' இயக்கத்திற்குத் திரட்டப்பட்டனர். கடின உழைப்பின் நன்மதிப்பை உணர்த்த, பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களில் மாணவர்கள் தங்கள் கைகளைக்கொண்டு வேலை செய்யப் பணிக்கப்பட்டனர். இந்த இயக்கம், பள்ளிகளில் நடைபெறும் 'சிங்கப்பூரைத் தூய்மையாக வைத்திருங்கள் இயக்கம்' மற்றும் தினசரி பள்ளிச் சூழலைச் சுத்தப்படுத்தும் பணிகள் போன்ற முயற்சிகள் மூலம் இன்றும் மாணவர்கள் மத்தியில் பொறுப்பையும் முயற்சி எடுக்கும் உணர்வையும் ஊக்குவிக்கிறது.

| | |
|---|---|
|  | ‘உன் கைகளைப் பயன்படுத்து' இயக்கத்தின் ஒரு பகுதியாக, டெல்டா சர்க்கஸ் தொடக்கப்பள்ளி மாணவர்களுடன் இணைந்து பிரதமர் லீ குவான் யூ தரையைத் தூய்மைப்படுத்துகிறார்.<br>6 ஜூன் 1976.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | ‘உன் கைகளைப் பயன்படுத்து’ இயக்கத்துடன் இணைந்து, பார்வையற்றோர் பள்ளியைச் சார்ந்த மாணவர்கள் தங்கள் வகுப்பறை மேசையைச் சுத்தம் செய்கின்றனர்.<br>28 மே 1976.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | 'உன் கைகளைப் பயன்படுத்து' இயக்கத்தின் போது, ஹுவா சொங் தொடக்கக்கல்லூரி மாணவர்கள் தங்கள் பள்ளி வளாகத்தைச் சுத்தப்படுத்துகின்றனர்.<br>3 ஜூலை 1976. |

| | |
|---|---|
| | வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | 'உன் கைகளைப் பயன்படுத்து' இயக்கத்தின் போது, குவீன்ஸ்வே உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் வண்ணமிகு விளக்குகளையும் சன்னல்களையும் சுத்தம் செய்கின்றனர்.<br>1979.<br>குவீன்ஸ்வே உயர்நிலைப்பள்ளி வழங்கியது. |

நாம் கடின உழைப்பு என்னும் நம்பகமான நல்லொழுக்கத்தை என்றும் கைவிடாமல் கடைப்பிடிக்க வேண்டும். ஒருவர் தம் கைகளை அழுக்காக்கிக்கொள்வதும், வியர்வை சிந்துவதும், ஆடைகளை அசுத்தமாக்கிக்கொள்வதும் உடலுக்கும் ஆன்மாவுக்கும் நல்லது, அது நமது பொருளாதாரத்திற்கும் நல்லது.

பிரதமர் லீ குவான் யூ
நியூ நேஷன்
7 மே 1976

...ஒரு பள்ளியில் வசதியான பெற்றோர் ஒருவர் தமது மகன் கைகளை அழுக்காக்கிக்கொள்வது கண்ணியமற்றது என்று நினைத்து, தமது மகனுக்கு ஒதுக்கப்பட்ட வேலையைச் செய்ய,த் தமது வீட்டு வேலைக்காரியை அனுப்புவதாகத் தாராளமாக முன்வந்தார்!

திி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்
5 ஜூன் 1976

எனது மாணவர்களைக் கழிப்பறைகளைச் சுத்தம் செய்யுமாறு நான் பணித்தேன். கழிப்பறைகளைச் சுத்தம் செய்வதும் ஒரு கௌரவமான வேலை என்று அவர்களிடம் கூறினேன். நமது முயற்சியால் அனைவரும் தூய்மையான, சுகாதாரமான கழிப்பறையைப் பயன்படுத்தலாம். இது நல்லதல்லவா?

திரு டியோ கியான் சாவ்
தாம்சன் ஷின் மின் பொதுப் பள்ளியின் தலைமை ஆசிரியர், 1971 - 1987
சிங்கப்பூர் தேசிய ஆவணக்காப்பகத்துடன் வாய்வழி வரலாற்று நேர்காணல்
அணுகல் எண். 00068



ஆங்லோ-சீனப் பள்ளியில் 'உன் கைகளைப் பயன்படுத்து' இயக்கம் நடந்து கொண்டிருக்கிறது.
1976
ஆங்லோ-சீனப் பள்ளி (ஜூனியர்) வழங்கியது.

கைகளைப் பயன்படுத்து,
நண்பர்களுடன்
சேர்ந்தே.வெட்கப்பட வேண்டாம்,
நீ முயன்றிட வேண்டும்.

தரையைத் துடை,
கதவைக் கழுவு.
அறையைச் சுத்தம் செய்,
உன் துடைப்பத்தால்.

சன்னலைக் கழுவு,
தலையணையைத் தூசி தட்டு.
உன் நெற்றியைத்
துடைத்துக்கொள்,
பயனுள்ளவனாக இரு.

ஏட்ரியன் சொங் சூன்
1976ல் ஆங்லோ-சீனப் பள்ளி

| | |
|---|---|
| | (ஜூனியர்) தொடக்கநிலை ஆறாம் வகுப்பு மாணவர்<br><br><br>*ஆங்லோ-சீனப் பள்ளி*, தொகுதி 45-இலிருந்து எடுக்கப்பட்டது. |

**விரயத்தைக் குறைத்தல்**

தண்ணீர் என்பது ஒரு முக்கியமான வளம், அதனைப் பள்ளிகளில் சிக்கனமாகப் பயன்படுத்த மாணவர்களுக்குக் கற்றுத்தரப்படுகிறது. சிங்கப்பூரின் முதல் நீர்ப் பாதுகாப்பு இயக்கம் 1971ஆம் ஆண்டு பொதுப் பயனீட்டுக் கழகத்தால் (தற்போது PUB, சிங்கப்பூர்த் தண்ணீர் முகவை) ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு நீண்டதொரு வறண்ட காலமும், நீர்ப் பங்கீட்டுக்கான அச்சுறுத்தலும் காரணமாக அமைந்தன. பள்ளிகளில் நடைபெற்ற நீர்ப் பாதுகாப்பு குறித்த உரைகளோடு பள்ளிப் பாடங்களுடன் இணைந்து, இந்த இயக்கம் அடுத்தடுத்த ஆண்டுகளிலும் தொடர்ந்து நீர்ச் சேமிப்பை ஒரு வாழ்க்கைமுறையாக ஊக்குவித்தது.


இன்றுவரை, பள்ளிகள் இந்த வருடாந்திர இயக்கத்திற்கு ஆதரவளித்து வருகின்றன. 2021ஆம் ஆண்டுமுதல், டி மார்ச்சு இயக்க மாதத்தின்போது சில பள்ளிகள் "நீர்ப்பாதுகாப்புப் புதன்கிழமை"யைக் (Water Wednesdays) கடைப்பிடித்து, நீர் நிலைத்தன்மை குறித்த செயற்பாடுகளையும் உரையாடல்களையும் நடத்துகின்றன. 2023-இல், 114 பள்ளிகளைச் சேர்ந்த 34,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் நீர்ப் பங்கீட்டுப் பயிற்சியில் பங்கேற்றனர்.

விலைமதிப்பற்ற வளங்களைச் சேமிப்பதுடன், கடந்த பத்தாண்டுகளில் பள்ளிகள் உணவு விரயத்தையும் தடுக்கத் தொடங்கியுள்ளன. 'புட் ஃப்ரம் தி ஹார்ட்' (Food from the Heart) என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட ' தூய்மைத் தட்டு இயக்கம்' (Clean Plate Campaign) உணவு விரயத்தின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, தட்டில் உள்ள

உணவை முழுமையாக முடிப்பதை வலியுறுத்துகிறது. 2013-இல் முதல் கட்டமாக ஐந்து பள்ளிகள் இதில் பங்கேற்றன. 2024ல் இந்தப் பள்ளிகளின் எண்ணிக்கை 67ஆக உயர்ந்தது.

2024-இல் சிங்கப்பூரின் மொத்தக் கழிவுகளுள் 11 சதவீதம் உணவு விரயத்தால் ஏற்பட்டது. இதன் அளவு ஆண்டுக்குச் சராசரியாக 750,000 டன்கள் ஆகும். கிட்டத்தட்ட 1,300 மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட ஒருபள்ளி ஒருநாளைக்கு 30 கிலோ முதல் 55 கிலோ வரை உணவு விரயத்தை உருவாக்கலாம்! மாணவர்கள் உணவை வீணாக்க வேண்டாம் என்று கற்பிப்பதைத் தவிர, மேலும் பல பள்ளிகள் உணவுக் கழிவுகளை உரமாக மாற்றும் உயிர் வாயு செரிப்பான்களைப் (biodigesters) பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

| | |
|---|---|
|  | நீர்ப் பங்கீட்டின்போது, பொதுவான குழாயில் தண்ணீர் சேகரிக்கக் காத்திருக்கும் மக்கள் கூட்டம். 1960கள். பொதுப் பயனீட்டுக் கழகம் - சிங்கப்பூர்த் தண்ணீர் முகவை வழங்கியது. |
|  | போபோ (Bobo), 1973-இல் அறிமுகப்படுத்தப்பட்ட, பொதுப் பயனீட்டுக் கழகத்தின் நீர் சேமிப்பு யானை சின்னம், வில்லி (Willie) மற்றும் லூலு (Lulu) ஆகியோரோடு நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் ஒரு கார்ட்டூன் தொடரில் உள்ளது. 1970கள் |

| | |
|---|---|
| | பொதுப் பயனீட்டுக் கழகம் - சிங்கப்பூர்த் தண்ணீர் முகவை வழங்கியது. |
|  | கொங் ஹூவா பள்ளி மற்றும் தஞ்சோங் காத்தோங் பெண்கள் பள்ளி மாணவர்கள் நீர்ப் பங்கீட்டுப் பயிற்சியின்போது ஒரு விநியோக மையத்திலிருந்து தண்ணீர் சேகரிக்கின்றனர்.<br>8 மார்ச் 2023.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்ட தண்ணீர்ப் பாதுகாப்புச் சுவரொட்டி<br>2023.<br>பொதுப் பயனீட்டுக் கழகம் - சிங்கப்பூர்த் தண்ணீர் முகவை வழங்கியது.<br><br>தண்ணீர் சேமிப்புக்கான பயனுள்ள குறிப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் இந்தச் சுவரொட்டியில், 2005 மற்றும் 2020ல் அறிமுகப்படுத்தப்பட்ட, பொதுப் பயனீட்டுக் கழகத்தின் நீர்த்துளி வடிவச் சின்னங்களான வாட்டர் வாலி (Water Wally) |

| | |
|---|---|
| | மற்றும் சாலி (Sally) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்தச் சின்னங்கள், தண்ணீரைப் பாதுகாப்பதன் மூலமும் நீர்வழிகளைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலமும் நீர் நிலைத்தன்மை குறித்த செய்திகளைப் பரப்புகின்றன. |
|  | ஒரு பாலர் பள்ளியில் நான்கு மணி நேர நீர்ப் பங்கீட்டுப் பயிற்சியின் போது, ஒருபிள்ளை தன் வகுப்புத் தோழனின் கைகளில் கவனத்துடன் தண்ணீர் ஊற்றுகிறான்.<br>15 மார்ச் 2017.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |

தண்ணீர்ப் பாதுகாப்பு மட்டுமல்லாமல், பள்ளிகள் மின்சாரச் சேமிப்பையும் வலியுறுத்தியுள்ளன. கீழே உள்ள மாணவர் எழுதிய கவிதை, மின்சாரத்தைச் சிக்கனத்துடன் பயன்படுத்தும்படி வாசகர்களை வலியுறுத்துகிறது.

'ஸ்விட்ச் ஆஃப் செய், வாட்ஸைச் சேமி, பணத்தைச் சேமி!
அது விலைமதிப்பற்றது, எனவே வீணாக்காதே;
உன் பணத்தைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்து, மின்சாரத்தில் அதை வீணாக்காதே.

வீணாக்கினால் பின்னர் வருத்தப்படுவாய்!
கவலைகொண்டு உன் பெற்றோர் உன்னைத் தண்டிப்பார்கள்.உன் நாடு இழப்பைச் சந்திக்கும்,

ஆகவே, தேவையில்லையெனில் விளக்குகள் அணைக்கப்பட்டுவிட்டன என்பதை உறுதி செய்.

மின்சாரத்தை வீணாக்காதே, நான் சொல்கிறேன், ஸ்விட்ச் ஆஃப் செய், வாட்ஸைச் சேமி, பணத்தைச் சேமி!'

லிம் ஹிம் சுவான்,<br>1979ல் ஹெவ்லொக் தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு மாணவர்,<br>*தி ஹெவ்லொக் ஹார்வெஸ்ட்*, தொகுதி II, எண். 3-இலிருந்து எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
|  | உணவு விரயத்தைக் குறைப்பதற்கான ' தூய்மைத் தட்டு இயக்கத்தின்' ஒரு பகுதியாக, கொங் ஹுவா பள்ளியைச் சேர்ந்த மாணவர் தமது உணவை முழுவதுமாக முடித்தபின் 'நான் ஓர் உணவு நாயகன்' (I am a Food Hero) என்ற ஸ்டிக்கரைப் பெறுகிறார்.<br>2023.<br>கொங் ஹுவா பள்ளியும் 'புட் ஃப்ரம் தி ஹார்ட்' (Food from the Heart) நிறுவனமும் வழங்கின. |
|  | காமன்வெல்த் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், பள்ளி உணவகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட சமைக்கப்படாத உணவுக்கழிவுகளை உணவு செரிப்பான்களில் இடுகிறார்கள். இது பள்ளியின் பசுமைப் பகுதிகளுக்கான உரத்தை உருவாக்குகிறது.<br>2024. |

| | |
|---|---|
| | காமன்வெல்த் உயர்நிலைப்பள்ளி வழங்கியது. |
|  | திருவாட்டி நூர்சத்துஷுஹாதா பின்தி முகமது ரசிஃப், லோயாங் வியூ உயர்நிலைப்பள்ளியின் உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆசிரியர், உணவு விரயத்தைக் குறைப்பதற்காகப் பள்ளியின் நகர்ப்புற விவசாயப் பண்ணைக்கு உரங்களாகக் காய்கறிக் கழிவுகளையும் முட்டை ஓடுகளையும் மறுபயன்பாடு செய்கிறார்.<br>29 அக்டோபர் 2024.<br>லோயாங் வியூ உயர்நிலைப்பள்ளி வழங்கியது.<br><br>ஒவ்வொருவரும் ஒரு சிறிய செயலில் ஈடுபட்டால், அது அனைத்தும் ஒன்றுசேர்ந்து சுற்றுச்சூழலுக்காகப் பெரிதான ஒன்றினை அடைய உதவும் என்று நான் என் மாணவர்களுக்குக் கூறியிருக்கிறேன்.<br><br>திருவாட்டி நூர்சத்துஷுஹாதா,<br>ஆசிரியர், லோயாங் வியூ உயர்நிலைப்பள்ளி. |

| | |
|---|---|
| | கல்வி அமைச்சின் Schoolbag.edu.sg என்ற இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டது. |

## ஒலி-ஒளிக் காட்சி முகவை - தூய்மை மற்றும் பசுமை

| | |
|---|---|
|  | சிங்கப்பூர் செய்திகள்: மரங்கள் நடுதல் (02:00)<br>27 பிப்ரவரி 1964.<br>கலாசார அமைச்சின் ஆவணம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br><br>சிங்கப்பூரின் ஆரம்பகால மரம் நடும் இயக்கம் இந்தக் காணொளியில் படம்பிடிக்கப்பட்டுள்ளது. இதில், சமூக விவகார அமைச்சர் ஒத்மான் வோக் அவர்களும் பொதுமக்களும் தீவைக் குளிர்ச்சியாக வைத்திருக்க நாற்றுகளை நடுவது இடம்பெற்றுள்ளது. |
|  | சிங்கப்பூர் செய்திகள்: சுத்தத்தைக் கடைப்பிடித்தல் (01:49)<br><br>கலாசார அமைச்சின் ஆவணம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br><br>இந்தக் காணொளி கண்ட இடங்களில் குப்பைகளைக் கொட்டுவதால் ஏற்படும் தீமைகளைப் பட்டியலிடுகிறது. மேலும், குப்பைகளைக் |

| | |
|---|---|
| | குப்பைத் தொட்டியில் போடுவதன் மூலம் சிங்கப்பூரைத் தூய்மையாகவும் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க பார்வையாளர்களை வலியுறுத்துகிறது. |
|  | டன்மன் உயர்நிலைப்பள்ளியில் உண்ணக்கூடிய தோட்டம் (00:48) 2024.<br>கல்வி அமைச்சின் Schoolbag.edu.sg<br><br>இந்தக் குறுங்காணொளியில், டன்மன் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், தங்கள் பள்ளியின் உண்பதற்குரிய காய்கறிகள் விளையும் தோட்டத்திலிருந்து காய்கறிகளை அறுவடை செய்வது எப்படி என்பதைக் கல்வி அமைச்சர் சான் சுன் சிங்கிடம் விளக்கிக் காட்டுகின்றனர். |

| | |
|---|---|
|  | *பொங்கோல் கோவ் தொடக்கப்பள்ளியில் உணவு விரயத்தைக் குறைத்தல்* *(00:34)* 2024.<br>கல்வி அமைச்சின் Schoolbag.edu.sg என்னும் இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டது.<br><br>உணவு விரயத்தைக் குறைப்பதற்காகப் பொங்கோல் கோவ் தொடக்கப்பள்ளியின் புத்தகத்தைப் பற்றியும் தூய்மைத் தட்டுப் போட்டியைப் பற்றியும் தொடக்கநிலை ஐந்தாம் வகுப்பு மாணவி நூர் ஷ்ஃபீகாவிடமிருந்து இந்தக் காணொளியில் கேட்டறியுங்கள். |

## <u>பழக்கவழக்கங்களும் விழுமியங்களும்</u>

சிங்கப்பூரின் ஆரம்பகால தேசிய நாட்டு உருவாக்கக் காலகட்டங்களில், வாழ்வாதாரத்தின் அடிப்படையிலேயே பழக்கவழக்கங்களையும் விழுமியங்களையும் வளர்ப்பதற்கான வழிமுறைகளில் இயக்கங்கள் கவனம் செலுத்தின. சாலை விபத்துகளைக் குறைப்பதற்காகச் சாலைப் பாதுகாப்பு வலியுறுத்தப்பட்டது. அதேசமயம், சிறு வயதிலிருந்தே சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும், பணத்தைச் சேமிப்பதும் ஊக்கப்படுத்தப்பட்டன. இதன்வழி, நாட்டின் வளர்ச்சிக்கு நிதி வழங்குதலில் பங்களிக்கப்பட்டது.

1970களின் பிற்பகுதியில் சிங்கப்பூர் மேலும் செழிப்படைந்தபோது, இந்த இயக்கங்களின் நோக்கம் நமது சமூகச் சூழலையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்காக விரிவடைந்தது. இந்த இயக்கங்களில் பல, பணிவன்பு, பரிவு, பகிர்ந்துகொள்ளுதல் போன்ற நற்பண்புகளையும் வலியுறுத்தின. மேலும், பள்ளியில் சிறந்த கற்றல் விளைவுகளுக்காக மொழிப் பழக்கங்களை வடிவமைக்கவும் முயன்றன. இந்த முயற்சிகள் இன்றும் பள்ளிகளில் தொடர்கின்றன. நமது கல்வி நிறுவனங்கள் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் மாணவர்களை வளர்ப்பதில் உறுதியாக இருக்கின்றன. இதன் மூலம் நாட்டின் எதிர்காலத்திற்குப் பங்களிக்கின்றன.

## <u>சாலைப் பாதுகாப்புக்கு முன்னுரிமை</u>


சாலைப் பாதுகாப்புப் பூங்காவிற்குச் சென்றது, பல தலைமுறை சிங்கப்பூரர்களுக்குப் பள்ளிக்காலத்தின்போது அனுபவரீதியாகப் பெறப்பட்ட இன்ப நினைவாகும். அங்கே, சைக்கிளோட்டி, மோட்டார் சைக்கிளோட்டி அல்லது பாதசாரி என வேடமிட்டு, போக்குவரத்து விளக்குகள் மற்றும் சிறிய கட்டடங்களால் சூழப்பட்ட சாலைகளில் மாணவர்கள் செல்வார்கள்.

சிங்கப்பூரின் முதல் போக்குவரத்து விளையாட்டு 1958ஆம் ஆண்டு ஷெல் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, காலாங் பூங்காவில் 'சாலைப் பாதுகாப்புக்கு

முன்னுரிமை' என்ற விளையாட்டு மைதானம் திறக்கப்பட்டது. இது ஐந்து மாதங்களில் 200 பள்ளிகளைச் சேர்ந்த 30,000க்கும் மேற்பட்ட மாணவர்களை ஈர்த்தது. 1966-இல், சிங்கப்பூரின் சாலை விபத்து மரண விகிதம் ஆசியாவிலேயே மூன்றாவது நிலையில் இருந்தபோது, பள்ளி இயக்கங்கள் மற்றும் நாட்டின் முதல் 'சாலைப் பணிவன்பு' (Road Courtesy) இயக்கம் மூலம் சாலைப் பாதுகாப்புக் கல்வி மேலும் வலுப்படுத்தப்பட்டது.

1970களில், விபத்தில் பாதிக்கப்பட்ட பாதசாரிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் 15 வயதிற்கும் குறைவானவர்கள் என்பதால், பிள்ளைகளுக்கான சாலைப் பாதுகாப்பு என்பது கவலைக்குரியதானது. 1965-இல் காலாங் 'பாதுகாப்புக்கு முன்னுரிமை' பூங்கா மூடப்பட்டாலும், 1977ஆம் ஆண்டிலிருந்து சிறிய போக்குவரத்து விளையாட்டுகள் - போக்குவரத்து விளக்குகள் மற்றும் அடையாளங்களுடன் - தொடக்கப்பள்ளிகளுக்குக் கொண்டுவரப்பட்டன. 1981-இல் கல்வி அமைச்சு, போக்குவரத்துக் காவல்துறை மற்றும் பிற அரசு மற்றும் தனியார் அமைப்புகளின் கூட்டு முயற்சியாகக் கிழக்குக் கடற்கரையில் ஒரு புதிய சாலைப் பாதுகாப்புப் பூங்கா அமைக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டிலிருந்து, 'பள்ளி வட்டாரத் திட்டத்தின்' (School Zone Scheme) கீழ் பாதுகாப்பை மேம்படுத்த, பள்ளிகளுக்கு அருகில் குறைந்த வேக வரம்புகளும் காட்சி அடையாளங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த வட்டாரத்திற்குள், மாணவர்களும் வாகனமோட்டிகளும் சரியான முறையில் சாலையைப் பயன்படுத்துவதை உறுதிசெய்ய, பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற பள்ளி ஊழியர்கள் போக்குவரத்துக் கண்காணிப்பாளர்களாகப் பெரும்பாலும் உதவுகின்றனர். சாலைப் பாதுகாப்பு, குறிப்பாக, கீழ் தொடக்கப்பள்ளி மட்டத்தில், உடற்பயிற்சிக் கல்விப் பாடத்திட்டம் மூலம் பள்ளிகளில் தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது.

| | |
|---|---|
|  | காலாங் பூங்காவில் 'ஷெல் போக்குவரத்து விளையாட்டில்' பங்கேற்கும் குழந்தைகள்.<br>25 ஆகஸ்ட் 1962<br>தகவல், கலைகள் அமைச்சின் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. |
|  | கேம்பிரிட்ஜ் தொடக்கப்பள்ளியில் நடத்தப்பட்ட சிறு அளவிலான போக்குவரத்து விளையாட்டுகளின் போது, போக்குவரத்து காவல் அதிகாரி ஒருவர் சிறுமிக்குச் சாலை விதிகள் பற்றிக் கற்றுக்கொடுக்கிறார்.<br>24 செப்டம்பர் 1979<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | கிழக்கு கடற்கரையில் உள்ள சாலைப் பாதுகாப்புப் பூங்காவில், சாலைப் பயனீட்டாளர்கள் மற்றும் காவல் அதிகாரிகளாக வெவ்வேறு பாத்திரங்களை ஏற்றுள்ள மாணவர்கள்.<br>20 ஜூலை 1986 |

| | |
|---|---|
| | தகவல், கலைகள் அமைச்சுத் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. |
|  | சிங்கப்பூர் போக்குவரத்து விளையாட்டுகளின் 65ஆம் ஆண்டு விழாவில், தகவல், தொடர்பு அமைச்சர், மற்றும் உள்துறை இரண்டாம் அமைச்சர் திருமதி ஜோசபின் டியோ, கோ-கார்ட்ஸ் நிகழ்வைத் தொடங்கிவைக்க வண்டிகளில் இருந்த குழந்தைகளைப் பார்த்துக் கொடியசைக்கிறார். 10 நவம்பர் 2023 சிங்கப்பூர்க் காவல் துறையும் சிங்கப்பூர்ச் சாலைப் பாதுகாப்பு மன்றமும் வழங்கியது. |
|  | பாதுகாப்புக்கென அறிமுகமான சேஃபி பேர் (Safey Bear) கரடி உருவம் / கேலிச் சித்திரம் |
|  | சிங்கப்பூர் சாலைப் பாதுகாப்பு மாதம் 2024க்கான பதாகை. இதில், சாலைகளைக் கடக்கும்போது குழந்தைகள் |

| | |
|---|---|
| | பின்பற்ற வேண்டிய நல்ல பழக்கவழக்கங்கள் குறித்துப் புதிய சாலைப் பாதுகாப்புச் சின்னங்களான மிஸ்டர் ஸீப்ராவும் குடும்பமும் 2011-இல் அறிமுகப்படுத்தப்பட்டன.<br>2024.<br>சிங்கப்பூர்க் காவல் துறையும் சிங்கப்பூர்ச் சாலைப் பாதுகாப்பு மன்றமும் வழங்கியது. |

**<u>எதிர்காலத்திற்காகச் சேமிப்பது</u>**

தேசியப் பள்ளிச் சேமிப்பு இயக்கம் (National School Savings Campaign) 1969ஆம் ஆண்டு பிஓஎஸ்பி என்னும் அஞ்சலகச் சேமிப்பு வங்கியுடன் (Post Office Savings Bank - POSB) இணைந்து மாணவர்களிடையே சிக்கனத்தைப் பேணுவதை ஊக்குவிப்பதற்காகத் தொடங்கப்பட்டது. மாணவர்கள் பணம் செலுத்தியோ, 10 காசு அஞ்சல் முத்திரைகளை வாங்கியோ, $2 மதிப்புள்ள அஞ்சல் முத்திரைகள் கொண்ட அட்டையில் சேமிப்பு வைப்பாக ஒட்டி வைக்கலாம்.

இந்த இயக்கம் தொடங்கப்பட்டபோது மாணவர்கள் சேமித்த தொகை $1.2 மில்லியனாக இருந்தது. இது 1977ல் $5.5 மில்லியனாக வளர்ந்தது. இதன் மூலம் சிங்கப்பூரின் பொருளியல் வளர்ச்சிக்கு முதலீட்டுநிதி பங்களித்தது. 1983-இல், நான்கு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இந்த இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டது. ஓராண்டுக்குள், பிஓஎஸ்பி, 5 முதல் 19 வயதுள்ளவர்களுக்காக 40,000க்கும் மேற்பட்ட புதிய கணக்குகளைத் திறந்தது.

இந்தப் புகழ்பெற்ற இயக்கம் SG50 கொண்டாட்டங்களுடன் இணைந்து 2015-இல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது முத்திரைகளின் மதிப்பு ஒவ்வொன்றும் 50 காசாக மாற்றப்பட்டது. மேலும், 20 முத்திரைகளைச் சேமிப்பு அட்டைகளில் ஒட்டி $10 வரை

சேமிக்கலாம். காலத்திற்கேற்ப, இந்த இயக்கத்தில் "ஸ்மைலி டவுன்" (Smiley Town) என்ற புதிய திறன்பேசி விளையாட்டுச் செயலியும் இடம்பெற்றது. இதன் மூலம் மாணவர்கள் தங்கள் சேமிப்பைக் கண்காணிக்கவும், பணம் சேமிக்கும் குறிப்புகளைக் கற்றுக்கொள்ளவும் முடிந்தது. ஆசிரியர்கள் மற்றும் பள்ளிப் புத்தகக் கடைகளின் ஆதரவுடன், சிங்கப்பூரில் உள்ள 190 தொடக்கப்பள்ளிகளும் இந்த இயக்கத்தில் பங்கேற்றன. இதில் கிட்டத்தட்ட 200,000 முத்திரைகள் விற்கப்பட்டன. மேலும், 5,000க்கும் மேற்பட்ட சேமிப்பு அட்டைகள் முழுமையாக நிரப்பப்பட்டன.

| | |
|---|---|
|  | பிஓஎஸ்பி தேசியப் பள்ளி சேமிப்பு இயக்க அஞ்சல் அட்டை.<br>1970கள்.<br>மறுஉருவாக்கம்<br>கல்வி அமைச்சு மரபுடைமை நிலையத் தொகுப்பு. |
|  | 1983-இல் அவசரத் தேவைகளுக்காக உணவைச் சேமித்து வைக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, பள்ளிச் சேமிப்பு இயக்கத்தின் சின்னமாக அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்மைலி என்ற அணிலைக் (Smiley the Squirrel) கொண்டுள்ள பிஓஎஸ்பி விளம்பரம்.<br>1985.<br>தேசிய நூலகம் சிங்கப்பூர் தொகுப்பு, பிஓஎஸ்பி வழங்கியது. |

<table>
<tr><td></td><td>கெங் செங் தொடக்கப்பள்ளி மாணவர்கள், பிஓஎஸ்பி கணக்குகளைத் திறக்க வரிசையில் நிற்கின்றனர்.<br>28 ஏப்ரல் 1983.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td></td><td>அட்மிரல்டி தொடக்கப்பள்ளி மாணவர்கள், SG50 கொண்டாட்டங்களுடன் இணைந்து மீண்டும் தொடங்கப்பட்ட தேசியப் பள்ளிச் சேமிப்பு இயக்கத்தில், தங்கள் சேமிப்பு அட்டைகளுடன் ஸ்மைலி என்ற அணில் சின்னத்துடன் உள்ளனர்.<br>23 ஜனவரி 2015.<br>வழங்கியோர்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td colspan="2">அப்போதெல்லாம், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அஞ்சல் முத்திரைகளை விற்பதில் மும்முரமாக இருந்தனர். மாணவர்கள் தங்கள் சில்லறைப் பணத்தில் ஐந்து அல்லது பத்துக் காசுகளைச் சேமிக்க அது உதவியது. அவர்கள் அந்த அஞ்சல் முத்திரைகளைச் சேமிப்புக்காக வாங்கினர். நாங்கள் குழந்தைகளை அவர்களின் அன்பளிப்புப் பணத்தைச் சேமித்து, அதைப் படிப்பிற்கோ தேவைப்படும்போது பயன்படுத்தவோ ஊக்குவித்தோம்.</td></tr>
</table>

திருவாட்டி ஃபோங் யுவெட் குவாய்,
நான்ஹுவா தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர், 1981 - 2003
சிங்கப்பூர் தேசிய ஆவணக்காப்பகத்துடன் வாய்வழி வரலாற்று
நேர்காணல் சேர்க்கை எண். 003385


**<u>கனிவுமிக்க சமுதாயத்தை உருவாக்குதல்</u>**

1979 ஜூன் 1ஆம் தேதி தொடங்கப்பட்ட தேசிய பணிவன்பு இயக்கம் (National Courtesy Campaign), ஓராண்டுக்கு முன்பு சிங்கப்பூர் சுற்றுலா மேம்பாட்டு வாரியத்தால் தொடங்கப்பட்ட இயக்கத்திலிருந்து உருவானது. இது சுற்றுலாப் பயணிகளிடம் உள்ளூர்வாசிகள் இன்னும் மரியாதையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. மரியாதையின் மதிப்பைப் புரிந்துகொண்ட பிரதமர் லீ குவான் யூ, சிங்கப்பூரர்கள் அக்கறையுடனும், சிந்தனையுடனும் இருக்கும் ஓர் இனிமையான சமூகச் சூழலை உருவாக்குவதற்காக, இந்த இயக்கத்தை ஒரு தேசிய முயற்சியாக மாற்றினார்.

இந்த இயக்கம், கல்வித்துறையில் ஓர் ஆழ்ந்த சிந்தனைப் பிரதிபலிப்பை உருவாக்கியது. அதைக் கற்பிக்க, ஆசிரியர்கள் தாங்களே முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டனர். பள்ளிகள் இந்த இயக்கத்தைப் பள்ளிக் கூட்ட உரைகள் மூலம் ஆதரித்தன. மேலும் பல்வேறு வகையான கட்டுரைப் போட்டிகள், சுவரொட்டிப் போட்டிகள் மற்றும் வாசகப் போட்டிகள் மூலம் உற்சாகத்தை உருவாக்கின. 2001ல், தேசிய பணிவன்பு இயக்கம் அதிகாரபூர்வமாக சிங்கப்பூர் கனிவன்பு இயக்கத்தின் (Singapore Kindness Movement - SKM) கீழ் கொண்டு வரப்பட்டது. மேலும், இது பாலர் பள்ளிகளிலும் மற்றும் தொடக்கப்பள்ளிகளிலும் இன்றும் செயல்படுகிறது.

1983-இல் சமூக சேவை நிறுவனங்களுக்கு நிதி திரட்டுவதற்காக நிறுவப்பட்ட 'சமூக உண்டியல்' (Community Chest) என்பதோடு இணைந்து, பரிவு மற்றும் பகிர்ந்தளித்தல் போன்ற விழுமியங்களும் பள்ளிகளில் வலியுறுத்தப்படுகின்றன. 1980கள் மற்றும் 1990களில் வளர்ந்த பல சிங்கப்பூரர்களுக்கு அதன் சின்னமாக இருந்த ஷாரிட்டி (Sharity) என்ற இளஞ்சிவப்பு யானை நன்கு பரிச்சயமானதாக

இருக்கும். இன்று, ஷாரிட்டி மற்றும் அதன் மற்றச் சின்ன நண்பர்கள், நற்குணமும் குடியியல் கல்வியும் (CCE) பாடங்களில் கற்பிக்கப்படும் ஒத்துணர்வு, பிறர் மீது அக்கறை காட்டுதல் போன்றவற்றை வளர்க்க நம் மாணவர்களை ஊக்குவிக்கிறார்கள்.

<table>
<tr>
<td></td>
<td>உயர்நிலைப்பள்ளியில், தேசிய பணிவன்பு இயக்கம் (National Courtesy Campaign) முழுவீச்சில் நடைபெறுகிறது.<br>1979.<br>கலாசார அமைச்சுத் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.</td>
</tr>
<tr>
<td>


Courtesy at School

The school can be regarded as an enlarged family, with students, teachers and principals as members. Most of the rules of courtesy in the family also hold good for the school but there are additional ones.

Courtesy on the part of students

(i) Remember to greet your principal and teachers as well as your fellow students whenever you meet them both inside and outside school;

(ii) Say: *Please* when asking someone for something, *Thank you* when you receive something, *May I* when asking for permission, *Excuse me* when you accidentally bump into someone, *I'm sorry* when you have done something wrong, such as arriving late;

(iii) Be on time for school. When you are late for the school bus, the driver has to wait for you and everyone in the bus may be late for school. When you walk into the class late, you distract the entire class. Being punctual for school means being considerate to your teacher and your classmates;

(iv) Be attentive in class and do not talk loudly or interrupt a lesson in progress without permission;

9

(v) Do queue up at the bus stop, tuckshop and school bookshop. You will come to your turn more quickly if everyone is orderly;

(vi) Listen attentively to the speaker or performer at assemblies or performances held in or outside school. It is rude to whistle, yell or stamp your feet or talk when someone is performing or speaking;

(vii) Be considerate and helpful to those who are weaker, handicapped or less bright in studies than you;

(viii) Do cheer for your team when it wins but remember that it is good sportsmanship to cheer the winning side even when your team loses. Never boo or jeer the other team.

Example by teachers

There are many ways in which teachers can show concern and consideration for their students, eg.:

(i) Greet your students whenever you meet them in or outside school or return their greetings. Address them by their names wherever possible;

(ii) Avoid casting aspersion on any students because of their socio-economic status or criticizing their parents;

(iii) Be punctual for class, appointments, meetings or extra-curricular activities.

Teachers can also set a good example by showing courtesy towards colleagues and towards parents of students. Teachers should in particular:

10

(i) Avoid criticizing their colleagues before students;

(ii) Be kind, helpful, patient and friendly to parents of students;

(iii) Acknowledge or respond to parents' letters or complaints promptly and tactfully;

(iv) Be punctual in appointments with parents;

(v) Treat all parents with equal courtesy regardless of their language, race, religion or socio-economic status.

11</td>
<td>தி வே டு கர்ட்டசி (The Way to Courtesy) (முகப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட பக்கங்களும்)<br>1979.<br>தேசிய நூலகம் சிங்கப்பூர் தொகுப்பு, கலாசார, சமூக, இளையர்துறை அமைச்சு வழங்கியது.<br><br>தேசிய பணிவன்பு இயக்கத்தின் தொடக்கத்தில், கலாசார அமைச்சால் தயாரிக்கப்பட்ட இந்தச் சிறு புத்தகம், சிங்கப்பூரை வாழ்வதற்கு ஒரு</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | சிறந்த இடமாக மாற்ற, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மரியாதையைக் கடைப்பிடிப்பது குறித்த வழிகாட்டுதலை வழங்குகிறது. |
| <br> | தேசிய பணிவன்பு இயக்கத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட சுவரொட்டி.<br>1998.<br>தகவல், தொடர்பு அமைச்சுத் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br><br>1982-இல், இந்த இயக்கம் புன்னகைப்பது பற்றியது மட்டுமே என்ற தவறான எண்ணத்தைத் தவிர்க்க, புன்னகைக்கும் தலைச் சின்னத்திற்குப் பதிலாக, சிங்கா என்ற சிங்கம் பணிவன்பு இயக்கத்தின் சின்னமாக மாற்றப்பட்டது. |

| | |
|---|---|
|  | ‘கைண்ட்ஸ்வில் டைம்ஸ் ஜூனியர்' (Kindsville Times Junior), இதழ் 2.<br>2025.<br>சிங்கப்பூர் கனிவன்பு இயக்கம் வழங்கியது.<br><br>இந்தக் காலாண்டு இதழ், பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கு, அவர்களைச் சுற்றியுள்ள மக்கள் மீது நன்றியுணர்வு, கனிவன்பு மற்றும் மதிப்புயர்வைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொடுக்கிறது. சிங்கப்பூர் கனிவன்பு இயக்கம் வெவ்வேறு தொடக்கநிலைகளுக்கு ஏற்றவாறு இதே போன்ற வளங்களையும் வெளியிடுகிறது. |
|  | ஷாரிட்டி ஹார்ட் விருது நிகழ்ச்சியில், கல்வி துணை அமைச்சர் சித்திக் சனிஃப் (இடது), ஷாரிட்டி யானையின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.<br>1 அக்டோபர் 1993.<br>தகவல், கலைகள் அமைச்சுத் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br><br>'பகிர்ந்து கொள்ளுதல்' (share) மற்றும் 'தொண்டு' (charity) ஆகிய சொற்களின் கலவையான ஷாரிட்டி யானை, குழந்தைகள் அக்கறையுடனும், |

<table>
<tr><td></td><td>பகிர்ந்தளிக்கும் மனப்பான்மையுடனும் இருக்க ஊக்குவிப்பதற்காக, 1984-இல் சமூக உண்டியலின் சின்னமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>கனிவு, பகிர்வு மற்றும் அக்கறையின் விழுமியங்களை வலியுறுத்துவதற்காக, ஷாரிட்டி யானை, மான்போர்ட் ஜூனியர் பள்ளியில் தொடக்கநிலை மாணவர்களைச் சந்திக்கிறது.<br>2 ஜனவரி 2018.<br>தேசியச் சமூக சேவை மன்றம் வழங்கியது.</td></tr>
<tr><td colspan="2">தேசிய பணிவன்பு இயக்கத்தில் ஈடுபடும் பள்ளி மாணவர்களைக் கொண்டு, அவர்களது வீடுகளிலும் நல்ல பழக்கவழக்கங்களைச் சேர்க்க இயலும். மேலும், வாழ்க்கைத் தரங்கள் கடினமாக இருந்த அறுபதுகளில் வளர்ந்த அவர்களது அண்ணன்களுக்கும் அக்காக்களுக்கும் இதன் மூலம் மாற்றம் ஏற்படுத்த இயலும்.<br><br>பிரதமர் லீ குவான் யூ<br>தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்<br>2 ஜூன் 1979</td></tr>
</table>


## மொழிப் பழக்கவழக்கங்களை வடிவமைத்தல்

'உங்கள் பள்ளி மொழிகளைப் பேசுங்கள்' (Speak Your School Languages) இயக்கம், ஜூலை 1979ல் 12 தொடக்கப்பள்ளிகளையும் உயர்நிலைப்பள்ளிகளையும் உள்ளடக்கிய இரண்டு மாத முன்னோட்டமாகத் தொடங்கியது. இது நாடு தழுவிய 'சீன மொழி பேசுவோம்' இயக்கத்திற்குச் (Speak Mandarin Campaign) சற்று முன்பு

நடத்தப்பட்டது. தொடக்கத்தில், சீன மாணவர்கள் வட்டார வழக்கு மொழிகளுக்குப் பதிலாக மண்டரின் பேச ஊக்குவிப்பதே இதன் நோக்கமாக இருந்தது.

அடுத்த ஆண்டில், இந்த இயக்கம் அனைத்துப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டபோது, மற்ற மொழிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பள்ளிகள் தங்கள் மாணவர்களின் மொழிப் பின்னணிக்கு ஏற்ப இந்த இயக்கத்தை நெகிழ்வாகச் செயற்படுத்தலாம். மூன்று முதல் நான்கு வாரங்களுக்கு, அவர்கள் ஆங்கிலம் அல்லது தாய்மொழியில் கவனம் செலுத்தலாம். சில பள்ளிகள் ஆங்கிலம் பேசுவதற்குக் குறிப்பிட்ட நாள்களையும், தாய்மொழி பேசுவதற்கு வேறு சில நாள்களையும் ஒதுக்கின. கதை சொல்லல், விளையாட்டுகள், விவாதங்கள், நாடகங்கள் மற்றும் கவிதை வாசித்தல் போன்ற செயற்பாடுகளை நடத்தி, மொழிப் பயன்பாட்டிற்கு துடிப்புமிக்க சூழலை உருவாக்கினர்.

இன்று, ஒவ்வோர் அதிகாரபூர்வ மொழிக்கும் தனித்தனி இயக்கங்கள் உள்ளன: 'நல்ல ஆங்கிலம் பேசுங்கள் இயக்கம்' (Speak Good English Movement) (2000 முதல்), 'சீன மொழி பேசுவோம் இயக்கம்' (Speak Mandarin Campaign) (1979), 'புலான் பஹாசா' (Bulan Bahasa) அல்லது மலாய் மொழி மாதம் (1988), மற்றும் 'தமிழ்மொழி விழா' (Tamil Language Festival) (2007). சிறந்த மொழி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வருடாந்திர விருதுகள், ஆசிரியர்கள் மொழிகளின் மீதான அன்பைத் தூண்டுவதிலும், சிறந்த கற்றல் சூழல்களை உருவாக்குவதிலும் முக்கியப் பங்காற்றுகின்றனர் என்பதை அங்கீகரிக்கின்றன.

| | |
|---|---|
|   | குவீன்ஸ்வே உயர்நிலைப்பள்ளியில், 'உங்கள் பள்ளி மொழிகளைப் பேசுங்கள்' (Speak Your School Languages) இயக்கத்திற்காக உருவாக்கப்பட்ட சுவரொட்டிகள். 1980. |

| | |
|---|---|
| | குவீன்ஸ்வே உயர்நிலைப்பள்ளி வழங்கியது. |
|  | தெம்பனிஸ் தொடக்கப்பள்ளியில், 'உங்கள் பள்ளி மொழிகளைப் பேசுங்கள்' (Speak Your School Languages) இயக்கத்தின்போது, தொடக்கநிலை நான்கு மாணவர்களுக்கான ஆங்கில வினாடி வினா.<br>22 ஆகஸ்ட் 1980.<br>தெம்பனிஸ் தொடக்கப்பள்ளித் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. |
|  | 'நல்ல ஆங்கிலம் பேசுங்கள் இயக்கம்' (Speak Good English Movement) இயக்கத்திற்கு ஆதரவாக நார்த் விஸ்டா தொடக்கப்பள்ளியால் உருவாக்கப்பட்ட அறிவுறுத்தல் சுவரொட்டி.<br>2021.<br>நார்த் விஸ்டா தொடக்கப்பள்ளி வழங்கியது. |

| | |
|---|---|
|   | மலாய் மொழி மாத (Bulan Bahasa) நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, லேக்சைட் தொடக்கப்பள்ளி மாணவர்கள், டிகிர் பாராட் எனும் பாரம்பரிய மலாய் கலைநிகழ்ச்சியை நிகழ்த்துகின்றனர்.<br>13 ஜூலை 2008.<br>மூலம்: பெரித்தா ஹரியான் © எஸ்பிஎச் மீடியா லிமிடெட். அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. |
|  | 'சீன மொழி பேசுவோம்' (Speak Mandarin) இயக்கத்தின் 30வது ஆண்டு விழாவில், பயிற்சிக் கலைகள் பள்ளியின் (தற்போது 'தி தியேட்டர் பிராக்டிஸ்' என்று அறியப்படுகிறது) மாணவர்கள் பாரம்பரிய சீன குவாய்பன் (kuaiban) கலைநிகழ்ச்சியை நிகழ்த்துகின்றனர்.<br>17 மார்ச் 2009.<br>தகவல், தொடர்பு, கலைகள் அமைச்சுத் தொகுப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. |
|  | உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையத்தின் தமிழ்மொழி கற்றல் விழாவில், பாரம்பரிய கைவினைப் பொருள்களைக் கற்றுக்கொள்ளும் |

| | |
|---|---|
| | தொடக்கநிலை ஐந்து மாணவர்கள்.<br>2025.<br>உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம் வழங்கியது. |

**ஒலி-ஒளிக் காட்சி முகவை - பழக்கவழக்கங்களும் விழுமியங்களும்**

| | |
|---|---|
|  | மிஸ்டர் ஸீப்ரா சாலைப் பாதுகாப்பு கார்ட்டூன்: பகுதி 1 - நடைபாதை விழிப்புணர்வு (01:05)<br>2018.<br>சிங்கப்பூர்ச் சாலைப் பாதுகாப்பு மன்றம் வழங்கியது.<br><br>சிங்கப்பூர்ச் சாலைப் பாதுகாப்பு மன்றம், சிங்கப்பூர்க் காவல்துறை மற்றும் ஷெல் ஆகிய மூன்று அமைப்புகளின் கூட்டு முயற்சியின் கீழ், குழந்தைகளுக்கு நல்ல சாலைப் பாதுகாப்புப் பழக்கங்களைக் கற்பிப்பதற்காக, நன்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரியின் 'ஊடாட்டம் மற்றும் மின்னிலக்க ஊடகப் பள்ளி'யால் இந்தக் கார்ட்டூன் உருவாக்கப்பட்டது. |

| | |
|---|---|
|  | பணிவன்பை நமது வாழ்க்கை முறையாக மாற்றுவோம்' (Make Courtesy Our Way of Life) (01:37)<br>1980.<br>தேசிய நூலகம் சிங்கப்பூர் தொகுப்பு, ஜான் ஜேம்ஸ் டி சூஸா மற்றும் கலாசார, சமூக, இளையர்துறை அமைச்சு வழங்கியது.<br><br>அப்போது கல்வி அமைச்சின் கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளுக்கான மையத்தில் இசைப் பயிற்றுவிப்பாளராக இருந்த ஜான் ஜேம்ஸ் டி சூஸாவால் இந்த இசைத்துணுக்கு எழுதி இசைக்கப்பட்டது. |
|  | இது ஷாரிட்டி நேரம்' (It's Sharity Time) (02:09)<br>2017.<br>சமூக உண்டியல் வழங்கியது.<br><br>முதன்முதலில் 1990ல் வெளியிடப்பட்ட இந்த இசை ஒலிநாடா, பரிவு மற்றும் பகிர்வின் முக்கியத்துவத்தைக் கற்றுக்கொடுக்கிறது. |

| | |
|---|---|
| 《大家说华语》'சீன மொழி பேசுவோம்' இயக்கப் பாடல் | 《大家说华语》'சீன மொழி பேசுவோம்' இயக்கப் பாடல்.<br>[Speak Mandarin Campaign Song] (01:33)<br>சுமார் 1983.<br>தகவல், தொடர்பு, கலைகள் அமைச்சு ஆவணம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது.<br><br>'சீன மொழி பேசுவோம்' (Speak Mandarin) இயக்கத்திற்கு ஆதரவாக வெளியிடப்பட்ட இந்தப் பாடல், சீன சிங்கப்பூரர்கள் தங்களுக்குள் சீன மொழி பேசுவதன் மூலம் தொடர்பை எளிதாக்கவும், தேசிய வளர்ச்சிக்குப் பங்களிக்கவும் ஊக்குவிப்பதற்காகப் பள்ளிகளில் கற்றுக்கொடுக்கப்படுகிறது. |
|  | ரொசைத் பள்ளியின் மலாய் மொழி மாத காணொளி (02:49)<br>2024.<br>ரொசைத் பள்ளி வழங்கியது.<br><br>மலாய் மொழி மாதத்தின் ஒரு பகுதியாக, சிங்கப்பூரின் தேசிய கீதத்தில் பொதுவாகத் தவறாக உச்சரிக்கப்படும் மலாய்ச் சொற்களை எவ்வாறு உச்சரிப்பது என்பதை |

| | |
|---|---|
| | மாணவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். |

## முடிவுரை

1950களிலிருந்து இன்றுவரை சிங்கப்பூரில் நடைபெற்றுள்ள பள்ளி இயக்கங்கள், நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் சுற்றுச்சூழலையும் எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்று நமக்கு வழிகாட்டுகின்றன. அவை நமது வாழ்க்கைமுறையிலும் மக்களாக நமது கூட்டு நினைவிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த முயற்சிகள் நமக்கு விழுமியங்களைக் கற்றுக்கொடுத்ததோடு, நம்மிடையே மீளுந்திறன், புத்தாக்கம், மதிப்பு, நல்லிணக்கம், சமத்துவம், கனிவன்பு, பரிவு முதலானவற்றை ஆழமாகப் பதிய வைத்துள்ளன.

இந்த முயற்சிகளில் நாம் பங்கேற்றதை நினைத்துப் பார்க்கும்போது, நமக்கு வழிகாட்டியும், நமது வாழ்க்கையில் ஆக்கபூர்வமான மாற்றங்களை விதைத்தவர்களாகிய நமது ஆசிரியர்களையும் கல்விப் பங்காளர்களையும் நினைவுகூர்கிறோம். நமது ஆசிரியர்களின் கடமையுணர்வும், 'நம்மால் முடியும்' என்ற மனப்பான்மையும் சிங்கப்பூர் இன்று அடைந்துள்ள நிலைக்கு ஒரு காரணமாகும்.

சிங்கப்பூருக்குப் பயனுள்ள வித்துக்களை விதைப்பதன் விளைவாக இந்தப் பாரம்பரியம் தலைமுறை தலைமுறையாகத் தொடர்கிறது, அது நம்மிலும் தொடர்கிறது. அதன் பயனாக, தலைமுறைக்கும், நமக்கு அடுத்த தலைமுறைக்கும் நாம் இதனைக் கொண்டு சேர்க்க இயலும். சிறந்த சிங்கப்பூருக்கான உங்கள் நம்பிக்கைகளும் கனவுகளும் என்ன? அந்தச் சிறந்த எதிர்காலத்திற்கு நீங்கள் எவ்வாறு பங்களிக்க முடியும்? நாம் தொடர்ந்து நல்ல வித்துக்களை விதைப்போம், நாம் நமது வீடு என்று அழைக்கும் இந்தப் பூமியில் நமது ஒன்றுபட்ட உறுதியோடும் முயற்சியோடும் செழிப்பானதும் பயனுள்ளதுமாகிய விளைவுகளை அறுவடை செய்திடுவோம்.

ஓர் SG60 நிகழ்ச்சி.

வழங்கியவர்கள்

ஆதரவு:

## நன்றி

கல்வி அமைச்சு மரபுடைமை நிலையம் (MOE Heritage Centre) பின்வருவோருக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது:

ஆங்கிலோ-சீனப் பள்ளி (ஜூனியர்)
மத்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு
நற்குணமும் குடியியல் கல்வியும் பிரிவு, கல்வி அமைச்சு
சிஹெச்ஜஜே கெல்லாக்
காமன்வெல்த் உயர்நிலைப்பள்ளி
தொடர்பு, ஈடுபாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு
சமூக உண்டியல்
பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு
டன்மன் உயர்நிலைப்பள்ளி
கல்வித் தொழில்நுட்பப் பிரிவு, கல்வி அமைச்சு
ஃபூஹுவா தொடக்கப்பள்ளி
வழிகாட்டிப் பிரிவு, கல்வி அமைச்சு
சுகாதார மேம்பாட்டு வாரியம்
ஜான் ஜேம்ஸ் டி சூஸா
கொங் ஹுவா பள்ளி
லோயாங் வியூ உயர்நிலைப்பள்ளி
கலாசார, சமூக, இளையர்துறை அமைச்சு
சுகாதார அமைச்சு
சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்
தேசியச் சமூகச் சேவை மன்றம்
தேசியச் சுற்றுப்புற அமைப்பு
தேசிய நூலக வாரியம்
சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்
நேவல் பேஸ் உயர்நிலைப்பள்ளி
நார்த் விஸ்டா தொடக்கப்பள்ளி
பாசிர் ரிஸ் உயர்நிலைப்பள்ளி
அஞ்சலகச் சேமிப்பு வங்கி (பிஓஎஸ்பி)
பொதுப் பயனீட்டுக் கழகம் - சிங்கப்பூர்த் தண்ணீர் முகவை
பொங்கோல் கோவ் தொடக்கப்பள்ளி
குவீன்ஸ்வே உயர்நிலைப்பள்ளி

ரொசைத் பள்ளி
சிங்கப்பூர் போதைப்பொருள் தடுப்புச் சங்கம்
சிங்கப்பூர் கனிவன்பு இயக்கம்
சிங்கப்பூர்க் காவல் துறை
சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ்
சிங்கப்பூர்ச் சாலைப் பாதுகாப்பு மன்றம்
செயிண்ட் ஆண்ட்ரூஸ் உயர்நிலைப்பள்ளி
உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம்

முந்தைய பொருள்களுக்கான ஆவணங்களின் பற்றாக்குறை காரணமாக, சில பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய முடியவில்லை. கண்காட்சி தொடர்பான மேலதிகத் தகவல்கள் உங்களிடம் இருந்தால், தயவுசெய்து கல்வி அமைச்சு மரபுடைமை நிலையத்தைத் (MOE Heritage Centre) தொடர்புகொள்ளவும்.